நாடார்குலமித்திரன்

THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

மாதம் மும்முறைப் பதிப்பு.

நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ3-8-0.

சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

“கண்ணுடைய ரேன்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்” (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்.
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.

சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4.] துந்துபிஹு மார்கழிமீ 27உ வியாழக்கிழமை (அருப்புக்கோட்டை) 1923ஹு ஜனவரிமீ 11உ [இதழ் 14

சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல்! இனிய நாவல்
மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும், பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்றோரும், மற்றோரும் கவிந்து கொண்டாடப்பெற்றது. ஆண் பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணு 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

அமரர் புராணம்.

ஒப்புயர் குலாபிமானியாய் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ்சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்றோர் குலப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை. 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் சில பிரதிகளே யிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—

ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

அநேக பத்திரிகைகளாலும் கற்றோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டது எது?

ஆநந்தமகிளா.

அநேக சித்திரப் படங்களுடன் கூடியது. மூன்றும் பதிப்பு.

இச் சிறந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய பல நூல்களில் ஒன்று. இதில் ஸ்திரீ புருஷர்களின் அவயவ அமைப்புகள், பொருத்தங்கள், உலக இன்பத்தையடையும் பல நல்வழிகள், தேகாரோக்கிய விதிகள், சந்தான சந்தோஷ ஹேதுக்களும் அவற்றையடையும் விதங்களும், பூர்வீக சந்தோஷ சல்லாப அநுஷ்டா முறைகளும் வெகு தெளிவாய் எடுத்துறைப்பது. விலை 1—8—0.

விலாசம்· ஜி. எஸ்· ஏஜென்ஸி, புதுவை.

ஆஹா! நல்ல சாப்பாடு.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பிகிளப் முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லக்கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் ‘நவீன சுகபோஜன சாலையை’ இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-௱-௱-ஸ்ரீ கனம் F. S. பெரையரா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் { எஸ். எஸ். கருப்பையா நாடார்.
விருதுபட்டி. { எஸ். ராமசாமி நாடார்

புதியசாலை! புதியசாலை!!

நாடார்குல மித்திரன்

புத்தகசாலை.

புதுவருஷத்தைமுன்னிட்டு விலையைக் குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தக விபரம்.

அஸரியா நாடார் ஜீவிய சரித்திரம்	—8—0
மகாமாயன் நாவல்	0—8—0
சௌந்திரகாந்தி நாவல்	0—12—0
அஸரியா நாடார் போட்டோ படம்	0—3—0
ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம்	0—1—6
நடராஜப் பதிகம	0—1—6
ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து	0—1—6
செல்வாசக் கீர்த்தனை	0—3—0
நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி	0—4—0
5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்டு	0—4—0
நமது குலத்தொழில் யாது	0—5—0

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும்.

குறிப்பு:—8-அணுவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

நாடார்குல மித்திரன் “புத்தகசாலை”
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.

பரமன்குறிச்சி நாடார் உயர்தர எலிமெண்டரி பாடசாலை.

நாடார்குல சிகாமணிகாள்! பரமன்குறிச்சி நாடார்கள் நடத்திவரும் இப்பாடசாலைக்கு கட்டடங்களுக்காக 5000 ரூ தேவையாயிருக்கிறது. நம் குல முன்னேற்றத்தைக் கருதிய யாவரும் தங்களால் இயன்ற உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். பினங், சிங்கப்பூர், ஐக்யமலாயு நாட்டுச் சகோதரர்கள் ஜாசின் ஸ்ரீமான் த. சு. மு. பெருமாள் நாடாரவர்கள் வசமும், பர்மாவில் வசிக்கும் நண்பர்கள் ரங்கூன் பெரிய போஸ்டு ஆபீஸ் மகா-௱-௱-ஸ்ரீ N. சாமுவேல் நாடாரவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ N. சுவாமியடியான் நாடாரவர்கள் வசமும், கொடுக்கும்படியாகவும், மற்றும் கனவான்கள் டை பாடசாலை தலைமை ஆசிரியவர்களுக்கே நேரே அனுப்பும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம். பணம்கொடுத்தவர்களின் இனவழி ஜாபிதா நம்மித்திரனில் பிரசுரம் செய்யப்படும்.

ஜே. ஜி. குமரப்ப நாடார்
P. S. குமரகுருபர நாடார்

ஸ்ரீ கிருஷ்ண லீலை.

(சிரமாமுனி எழுதுகிறார்)

பகவான் அரவின் மேலாடியது.

முன் தொடர்ச்சி.

யமுனாநதிப் பிரவாகத்தில்ப்பிரிந்தோடுகின்ற ஓர் மடுவில் வாசஞ் செய்கின்ற காளியனென்னும் சர்ப்பராஜனுடைய விஷாக்னிச்சுவாலையினால் அந்த மடுவின் ஜலமானது எப்போதும் கொதித்துக்கொண்டிருக்கும். அந்த ஜலத்துக்கு நேராய் ஆகாய வீதியில் பறக்கின்ற பட்சிகள் யாவும் அவ்விஷ வேகத்தினால் சோதித்து வீழ்ந்திறந்துபோகும். அம்மடுவின் சமீபத்திலுள்ள மரம் செடி கொடி புல்ப்பூண்டு முதலிய யாவும் கருகிப்போகும்படியும் அது உண்டானதில்லை. ஆனால் அதன்பக்கத்தில் ஒரு கடம்ப விருட்சம் மட்டும் பிழைத்திருந்தது. ஸ்ரீ கிருஷ்ணனுடைய தாயாரவர் அம்மடுவின் பக்கம் மாடு மேய்க்கப் போகக்கூடாதென்று சொல்லியிருந்தும்பகவான் ஒரு நாள் அம்மடுவைச் சோதிக்க வெண்ணி, அத்தீர்த்தம் யாவருக்கும் உபயோகப்படச் செய்யவேண்டுமென்ற திருவுளங்கொண்டு ஒரு நாள் அக்கடம்ப விருட்சத்தின் மீதேறி தனியிற் சென்று அம்மடுவின் ஜலம் குபீரென்று சப்திக்கத் தொம்ப தொப்பென்று குதித்துக் கலக்கினார். கலக்கும்போது உண்டாகிய வேகத்தினால் கொதித்துக் கொண்டிருந்த ஜலமானது பொங்கி அஷ்டதிக்குகளிலும் ஜலத்தின் அலைகளும் திவலைகளும் மோதின. அதன்பரிசத்தால் அவ்வெல்லைக்குள்ளிருந்த சகல பிராணிகளும் வெப்பமடைந்தன. சகல விருட்சங்களும் தீய்ந்தன. ஸ்ரீபாலகோபாலச் சிறுவனைப்பார்த்து அந்த சர்ப்பேந்திரன் தன்னுடைய இருதயத்தில் நின்றும் கோபாக்கினியினாலுண்டாகிய சுவாலைகளை கக்கினான். கக்கின வுடனே மடுவின் ஜலமெங்கும் பரவிக் கொதித்து புகை யெழுப்பி பார்ப்பவர்களுக்கு பிராண பீதியை யுண்டாக்கிற்று. இப்படி விஷச் சுவாலையை கக்கிய காளியன் அதி ஆச்சரியமடைந்து அப் பாலனை உடனே கொல்ல நினைத்து அதிகோபத்துடன் ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி விஷாக்கினியுடைய தனது கோரைப் பற்களினால் கடித்து கோபாலனுடைய பாதாதிகேச பரியந்தம் சுற்றிக் கொண்டான். அப்படிச்சுற்றியும் பகவான் சலியாமல் நின்று கொண்டிருந்தார் இப்படியிருக்கின்ற பகவானைப் பார்த்து கோபால பாலர்களும் மூர்ச்சையடைந்தனர். மீண்டெழுந்து அழுதனர் பசுக்களும் கன்றுகளும் அம்மடுவிற் பாய்வதுபோல் ஒடியோடி அம்மா அம்மா வென்று கதறிக்கொண்டிருந்தன.

அந்தச் சமயத்தில் பூமி கிடுகிடென்று நடுங்கியும் ஆகாயத்தில் பேரிரைச்சலுமுண்டாயின. அந்த கோகுலத்திலுள்ள சகல ஜனங்களுடைய சரீரமும் நடுங்கின. நந்தகோபர் முதலியவர்களும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஏதாகிலும் தீமை நேர்ந்ததோவென்று பயந்து பலராமருடன் பகவானை ஆவாரத்துடன்தேடிச்சென்றார்கள். பகவான் லீலைகளில் இதுவு மொன்றாகுமென்று பலராமர் உணர்ந்திருந்தும் தாமும் மற்றவர்களைப்போல் ஓடி வந்தார். இப்படி பல யிடங்களிலும் தேடி கடைசியாக காளியனது மடுவை அடைந்தார்கள். மடுவின் மத்தியில் சர்ப்ப ராஜனிடத்தில்அகப்பட்டுக்கொண்டு சர்ப்ப சரீர பாசத்தினால் பந்திக்கப்பட்டிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணபகவானைக் கண்டு திடுக்கிட்டு ஏக்கங்கொண்டு கிருஷ்ணமாதவா கோவிந்தா வென்று அலறி இந்த மடுவினிடத்தில் உம்மை விட்டு மகா பாவிகளாகிய எங்களைப் பிரிக்கும்படி தெய்வம் பிரதிகூலஞ் செய்ய நினைத்ததோவென தங்களை நிந்தித்து விசனப்பட்டுக் கொண்டிருக்கின்ற கோபாலகர்களையும் பசி தாகங்களை யொழித்து பேச்சலை விட்டு கண்ணிமையாமல் ஸ்ரீ பகவானையே பார்த்துக்கொண்டிருக்கின்ற பசுக்களையுங்கண்டு எல்லாரும் திடுக்கிட்டேங்கி மகா கோஷ்டத்துடன் யசோதா பிராட்டியைக் கட்டிக்கொண்டு அலறி வியாகூலப்பட்டு பகவானது லீலைகளை நினைத்து ஆ கிருஷ்ணாவென்கிற சப்தத்துடன் பிரலாபித்தார்கள்.

இப்படி ஒருவர்க்கொருவர் கட்டியணைத்து முட்டியழுது பிரலாபித்துக்கொண்டு பகவானுடன் இம்மடுவில் நாமெல்லோரும் பிரவேசித்து ஜனார்த்தன பிரீதியார்த்தமாக கிருஷ்ண பதத்தை யடைவோமென்று யாவரும் ஏககாலத்தில் தீர்மானித்துக்கொண்டு ஆ கிருஷ்ணாவென்று அந்த மடுவிற் பிரவேசிக்க யத்தனித்தார்கள். அப்போது பலபத்திரானவர் தடுத்து கிருஷ்ணனுக்கு யாதொரு குறையும் வராதென்று தைரிய வார்த்தைகளினால் தேற்றிக்கொண்டிருந்தார்.

தன்னைக்குறித்து இவ்விதம் பிரலாபிக்கும் ஆயர்களைப்பார்த்து கிருஷ்ண பகவான் சர்வசக்திமான் ஆனபோதிலும் லோகமரியாதையின் நிமித்தமாக வகித்த ஒரு முகூர்த்தகாலம் ஸ்தம்பித்தாய் நின்று பின்புதமது விராட்ஸ்வரூப விஸ்வாகார மகிமைகளைக் கொண்டு திருவிக்கிரமசாமியைப்போல் திவ்விய திருமேனியை விருத்தியடையச் செய்தார். அவ்வளவில் அச் சர்ப்பராசன் தனது சரீரம் வருத்தத்தை அடைய சகிக்கக் கூடாதவனாய் தான் சுற்றிக்கொண்டிருந்த சுற்றுகளையகற்றி கடிக்கின்றதையும் ஒளித்து தன்னுடைய படங்களை விரித்து பகவானைப் பார்த்து பெருமூச்சுவிட்டு நாசித்துவாரங்களில் விஷப்புகை யெழுப்பினான். அத்தருணத்தில் கிருஷ்ணன் அவலீலையாகப் பிடித்தெடுத்துக்கொல்ல மனமில்லாமல் அந்தப் புசகேந்திரனுடைய கண்களிலிருந்து விஷநீர்கள் வருவிக்க அலட்சியமாக குயவனுடைய சக்கரத்தைப்போல் இறுகின்றது இடசாரி வலசாரியாகச் சுற்றி அம்மடுவெங்கும் ஓடியோடி அலையும்படி வீசிவீசி யெறிந்து வருத்தப்படுத்தினார். பின்னுமவன் பின்தொடர்ந்து பிடித்து அவன் பணமண்டலங்களில் நின்று ஒரு கரத்தினால் அவன் வால் நுனியைப்பிடித்து மடுவின் அலைகளின் ஓசையை மதுரத்வனியுள்ள மிருதங்கமாகவும், பிருந்தாவனத்திலுள்ள பாரபட்சிகளின் சுகத்வனிகளை சங்கீத கானங்களாகவும், அந்த காளியனுடைய பணமண்டலங்களை ரத்னகசிதமான மண்டபமாகவும், நர்த்தனஞ் செய்யும்போது விஷமுண்டுபண்ணத தக்கதாயிருக்கிற அந்தப் பணமண்டலங்களில் எது தலையெடுக்கிறதோ அப்பண மண்டலத்தை மிதித்து மிதித்து நர்த்தனஞ் செய்யத் தொடங்கினார். பகவானுடைய மிதிவேகம் பொறுக்கமாட்டாமல் அச் சர்ப்பராசன் விராயாய் வீரிட்டான். தனது கர்வமழிந்து வாய்களின் வழியே விஷப்பொறிகளை யுதிர்த்து நாசிகளின் வழியே விஷஸ்வாஸங்களை விட்டு, பல ஹீனனாகி இளைத்து திக்குவிதிக்குகளைப் பார்த்துக் கொண்டு பிராணனைவிடாத சவத்தைப்போல்ச் சாந்தனாகி தனது இருதயத்தில் பல வாறு சிந்திக்கத் தொடங்கினான்.

இப் பாலகன் சாமான்யனல்ல. சாதாரண மனிதப்பிறவியுமல்ல. அஷ்ட திக்குகளையும் பஸ்பமீகாப்படுத்தும என்னுடைய விஷச் சுவாலையைப் பொருத்து என்னையுஞ் சின்னப்படுத்தக் கூடிய அவ்வளவு வல்லமை அந்த ஜெகரட்சகனாகிய ஸ்ரீமன் நாராயணன ஒருவனுக்குண்டேயன்றி மற்றொருக்கேனுமில்லை. ஆகவே இவன் அந்த ஹரியாகவே யிருக்கவேண்டும் என்று பீதியை அடைந்து வந்தனஞ் செய்து மிகவும் ஆயாச முற்றிருந்தான்.

கூதிராதனே இந்தப் பிரகாரம் தனது கர்வமழிந்துசவத்தைப்போல்அசைவற்றவனாய் வீழ்ந்துகிடக்கின்ற பாமபரசனைப் பார்த்து இவனுடைய பத்தினிகளான நாக கன்னிகைகள் தங்கள் பர்த்தாவாகிய நாதனுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தை நினைத்து மனது கலங்கலடைந்து கண்களிலே தாரை தாரையாய் ஜலம் பெருக ஸ்ரீ கோபால சூடாமணியாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானைப்பார்த்து சாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து தங்கள் சிரோபாகத்திலுச்சியின்மீது இரண்டு கரங்களையும் அஞ்சலி செய்து குழந்தைகளை முன்னிட்டு கமகாண்டு ஸ்துதி செய்து நின்றார்கள். ஸ்ரீ பகவானும் பாதார விந்தத்தாடன நடனங்களில் நின்றுஞ் சாந்தராய் அப்பாலெழுந்தருளி பரிபூரணதாய் கடாட்சித்தார். நாகராஜனும மூர்ச்சை தெளிந்தெழுந்து சுவாமியை துதிசெய்து நின்றான்.

அப்போது பகவான் அவனுக்கு சில உபசார வார்த்தைகளைச் சொல்லுகிறார். காளியனே! இன்று முதல் இந்த மகாநதி தீர்த்தில் யாவரும் ஸ்நானபானங்களைச் செய்து சந்தோஷிக்கவும் கோவர்க்கங்கள் மனுஷர்கள் தங்கள் தாகந்தீரும்படியாய் நீராடிதாக பானஞ் செய்யவும் இந்த நதியை விட்டுவிட்டு நீயும் உன் பத்தினி புத்திரர்களும்சமுத்திரத்திற்குப்போய் என்னை நினைத்து சுகமாய் வசித்திருங்கள் இதுமுதல் இத்தீர்த்தத்தில் மூழ்கு வோர் இஷ்ட சித்திகளைப் பெறுவதுடன் சர்ப்பங்களால் யாதொரு தோஷமும் அடையாதிருப்பார்களாக என்று அருள் புரிந்தார்.

(இன்னும்வரும்)

மனமும் எண்ணமும்.

“அகத்தினழகு முகத்தில் தெரியும்” என்பது நமது நாட்டில் வழங்கும் முதுமொழியாகும். ஒருவன் உள்ளத்திற்றோன்றும் எண்ணங்கள் யாவும் அவன் முகக்குறிவாயிலானும், உரைகள் வாயிலாலும், செயல்கள் வாயிலானும் புறத்தே தோன்றி விடுகின்றன நறுமணமுள்ள விஷயத்தை ஓரிடத்தில் பொதிந்து மறைத்து வைப்பினும் அதன் நாற்றம் வெளியே வீசித் தன் இரகசியத்தைத் தெற்றன அறிவித்துவிடுகின்றது. அவ்வாறே ஒருவன் தன்எண்ணத்தை வெளியிடாமல் எவ்வளவுதான் மறைத்துவைப்பினும் அது அவன் செயல்களாலும் வேறு பல குறிகளாலும் புலனாகி விடுகின்றது. சுருங்கக்கூறின் மனத்தினின் றெழும் எண்ணங்களே மானிட வாழ்க்கைக்குக்காரணமான கருவியென்னலாம். ஊற்றினின்றும் நீர் சுரப்பதுபோல மனத்திடை எண்ணங்கள் எழுந்துகொண்டேயிருக்கின்றன. மனதைக் குரங்கிற்கு ஒப்பிட்டுக் கூறுவர் பெரியோர். மனக்குரங்கு எவ்விஷயத்திலும் ஒரு வழிபற்றி நில்லாது. எப்பொழுதும் சலித்துக்கொண்டேயிருக்கிறது. மனமே மனித வாழ்க்கையில் நிகழும் இன்பம் துன்பம், நேசம், துவேஷம், பயம், தைரியம் முதலியவைகளுக்குக் காரணமாயிருக்கின்றது. மனமும் செயலும் ஒருங்கே சேர்ந்து மனிதன் குணத்தை நிர்மாணிக்கின்றன. குணத்தை மனிதன் ஆரம்பத்திலேயே செம்மைப்படுத்தாவிடில் அதுவே சிலகாலத்திற்குப் பின்னர் இயற்கையாக மாறிவிடுகின்றது. மனமானது புத்தியுடன் கூடும்பொழுது அதற்கு எண்ணங்கள் உற்பத்திசெய்யும் சக்தி ஏற்படுகின்றது. அவ்வெண்ணங்கள் நல்லவை என்றும், கெட்டவை என்றும் பகுத்தறியும் சக்தி அறிவின் பாற்பட்டதாகும். ஞானம், அஞ்ஞானம் இவ்விரு கூற்றினைப் பிரிக்கும சக்தி அறிவினிடத்தே அமைந்துள்ளது. செயல்கள் இந்திரியங்களின் கருமங்களாகும்; அறிவிடத்தும் இந்திரியங்களிடத்தும் மனமானது ஊடுருவிச் சென்று விடுதலால் மனம், புத்தி இந்திரியங்கள் ஆகிய இவைகள் ஒன்றுபட்டே மானிட வாழ்க்கைக்கு இலக்கான கருமங்களின் நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. இந்திரியங்களின் பால் மனம் மிகுமான பற்றைக் கொண்டிருக்கும் வரையிலே தான் அறிவின் கட்டுறவு மனதிற்கு ஏற்பட்டிருக்கும்; நன்மைதீமைகளைப் பகுத்தறியும சக்தியும் குன்றியிருக்கும். மனம் இந்திரியங்களிடம் அதிக பந்தத்தைப் பெற்றிருக்குமாயின மனிதன் உலக வாழ்க்கையிலும பந்தப்பட்டுத் துன்பத்தை அனுபவிப்பான். மனத்தின் தன்மைக்குத் தக்கபடியே அவனுக்கு பிரபஞ்சமும் தோன்றும். பிரபஞ்சத்தின் உண்மை நிலை அவன் மனதிற்றோன்றாது. இந்திரியத்தில் அதிகப்பற்றுக் கொண்டவனின் தேகம் எளிதில் அவன் சுவாதீனத்தில் நில்லாது. அத்தன்மையுடையோன் மனதிற்கு சோம்பலும், அற்ப சுகங்களில் ஆசையும் தோன்றலாகி விடுகின்றன. அஞ்ஞான மேலிட்டினாலும் பகுத்தறிவின் கேட்டினாலும் அவனுக்குத் தீய எண்ணங்களும் தீய செயல்களும் மென்மேலும் வளர்ந்துகொண்டே வரும்; அசத்தியம், மோசம், கபடம் புரட்டு இவைகள் அவன் மனதில் உதயமாகிக்கொண்டே யிருக்கும். நாவை அடக்கி ஆட்கொள்ளுய சக்தி அவனிடமிருக்காது. அதனால் புறங்கூறல் வீண்வம்பு பேசுதல், பட்சமற்றஉரைகளாடல். வெறுப்பாக மொழிதல், பிறரை இகழ்தல், கடிதல், பிறர் குற்றங்களைப் போற்றிக் கூறல் இவைபோன்ற தீயகுணங்கள் அவன் வாழ்க்கையில் மேன்மை பெற்றிருக்கும். குற்றமுள்ள செயல்களே அவன் வாழ்க்கையில் உறைந்து பலவிதமான துன்பத்திற்கு அவனை ஆளாக்கிவிடும் அவன் காமவயப்பட்டுச் செய்யத்தகாத காரியங்களைச்செய்து அதனால் வெட்கம் மானம் இவைகள் இழந்து பிறரால் நிந்திக்கப்பட்டு வருந்துவான். பிறரிடம் பொறாமையும் அசூயையும் அவனிடம் குடிகொண்டிருக்கும். அவைகளினின்றும் பயம் துக்கம் நஷ்டம் அதிருப்தி முதலிய துன்பங்கள் அவனுக்குப் பாத்திரங்களாகி விடுகின்றன. தனக்கு நிகர் எவருமில்லை என்ற செருக்கு அவனுக்கு உண்டாகும். அப்பொழுது பிறரால் வஞ்சிக்கப்பட்டு மதிமயங்கி வருந்துவான். அவன் வீண் டம்பத்தில் ஆசைகொண்டவனாய்ப் பலவிதமான துன்பங்களை ஏற்று வருந்துவான். பிறருக்குக் கேடுசூழ நினைத்துத் தனக்குத்தானே கேடுவிளைவித்துக் கொள்வான். கோபம், ஆத்திரம், பொறாமை, பேராசை முதலிய துர்க்குணங்கள் அவன் பால் அடைக்கலம் புகுந்துவிடும். அவைகளால் தன் மதிப்பையும் கைப்பொருளையும் இழந்து பலவிதமான கஷ்டங்கள் அனுபவிப்பான். இத்தகைய துன்பங்களுக்குக் காரணமாயிருப்பவை மனமும் அதனிடை தோன்றப் பெறும் எண்ணங்களுமே யாகும். மனதிலெழும் தீய எண்ணங்களைக் காட்டிலும் மனிதனுக்கு வெளியே வேறு சத்துருக்களில்லை.

இதுகாறும் மனத்தின் கேட்டினாலும் தீய எண்ணங்களினால் உலகில் மானிடருக்கு இடைப்படும் பலவித இன்னல்கள் பற்றி எழுதினோம். இனிமனிதன் உலகில் நல்வாழ்க்கையை இனிதுநடத்திவர விரும்புவனாயின் அவன் மனதை எந்நிலையில் நிறுத்திவர வேண்டுமென்பதைப் பற்றிச் சிறிது வரைவோம். இனிய வாழ்க்கையை எய்த விரும்புவோன் மனதைக் கருமேந்திரியங்களின் பால் அதிக ஆதிக்கம் கொள்ளாதவாறு அடக்கியாட்கொள்ள வேண்டும். உலகில் தான் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் தன் மனத்தினிடை எழுந்தவைவும் எண்ணங்களின் பரிணமம் என்பதை அவன் முதலில் நன்குணரல் வேண்டும். இல்லறதருமத்தைப் பற்றிச் சுகவாழ்வெய்துவோனுக்கு மன இந்திரியங்களின்பாற் படாமல் முற்றிலும் தன்னைப் பிரித்தல் சாத்தியமானதன்று. எனினும் அவை வேண்டிய அளவு மிதமானபற்றையே கொண்டிருத்தல் அவசியமாகும். அப்பொழுதுதான் மனம் அறிவின் பால் அதிகப் பற்றுள்ளதாகி ஞானத்தையும் சாந்தத்தையும் பெறும். மனதைச் சாந்த நெறியில்நடத்திச்செல்வோன் நல்லபுத்திசாலியாயும் பரிசுத்தனாயுமிருப்பான். இவன்தான் தனக்குரிய நிலையைத் தானே தேடிக்கொள்ளும் ஆற்றல் பெற்றவனாவான். அவனுடைய குணமும் நன்மையில் பெரிதும் நாடி நின்று இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிக்கும் வழியில் நற்செயல்களை நடத்தி நல்வாழ்க்கையில் அவனை ஈடுபடுத்தும். அமிர்தியமான பக்தத்தைப் பெறும் சதந்தரனாய், பரோபகாரியாய், பிறருக்கே உழைக்கும் நற் குணமுடையவனாய் இவ்வுலகில் கீர்த்தியுடன் வாழ்ந்து வருவான். சாந்தமும் பொறுமையும் அவன் மனதில் குடிகொண்டிருக்கும். தான் கைக்கொண்ட எக்கருமத்தையும் எவ்வித கஷ்டத்தையும் கவனியாது முடிக்கும் ஆற்றல் பெற்றவனாவான். அவன் நாடடக்கம் பட்சம், அன்பு, அடக்கம், சாந்தம், அகம்பாவமின்மைஆத்மசுத்திமுதலியநற்குணங்கள் வாய்க்கப்பெற்றவனாய்சாத்வீககுணத்துடன் கூடிய நல்வாழ்க்கையை இனிது நடாத்திவருவான். இத்தகைய நற்குண நற்செயல்கள் யாவும் இல்லற நெறிபற்றி ஒழுகும் கிரகஸ்தனுக்குரிய இலக்கணங்களாகும். இத்தகைய சிறிய குணம் வாய்க்கப் பெற்றவனின் மனமானது இல்லறத் தினிறுதியில் ஞானத்தின் பாற்பட்டு ஆத்ம வழியை நாடிநின்று பேரின்பப்பேற்றினைப் பெறும் மார்க்கத்தில் செல்லா நிற்கும். பேரின்பப் பேற்றில் நாட்டங் கொண்டவர் களுக்கு இப்பிரபஞ்சமும், அதன் நிகழ்ச்சியும் அநித்திய மென்ற ஞானம் உண்டாகும். பேரின்பத்தில் மனம் லயித்து விடும், உலகில் மானிடர் பெறும் வாழ்க்கைக்கு இலக்கானதனம் எதுவோ அத்தகைய பேரின்ப நெறியை நாடினவர், வாழ்க்கையின் உண்மைப் பயனைப் பெற்றவர்களாய், அவனியில் மறுபிறப் பெய்தா முக்தர்களாகி விடுவார்கள்.

ஆதலின் நேயர்களே! “மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்” என்ற ஆன்றோர் ஆணைக்கு இலக்காக இகவாழ்க்கையில் மனதை உலக தருமத்திற்குரிய வழியில் நடாத்திப் பின்னர்ச் சாந்த நிலைபெற்று வாழ்க்கைக் குறுபயனைப் பெறுவீர்களாக, ஓம்! சாந்தி ; சாந்தி !!!

சுதேசபரிபாலினி;

அக்கினிக் காவடியும்

அடிபிடியும்.

லெட்சுமண பிள்ளையின் வீரமொழி.

ஜாதித்துவேஷப் போலிகளுக்கு எச்சரிக்கை.

இந்துக்களுக்கு அறிவுறுத்தல்.

உத்தமரின் உண்மை வாசகம்.

(நாகர்கோயிலிலிருந்து ஸ்ரீமான் L. S. லெட்சுமண பிள்ளைஅவர்கள் தஞ்சையிலிருந்து வெளிவரும் ஸமரஸ போதினிக்கு பின் வருமாறு எழுதுகிறார்.)

தென் திருவிதாங்கூரில் வேள்விமலைச்சாரலில் வள்ளியைக் கலியாணஞ் செய்ய வந்தவிடத்தில் வேட ரூபந்தாங்கி மணம் நிறைவேறியபின், அதே இடத்தில் கோவில் கொண்டருளிய சுப்பிரமணியக்கடவுள் வீற்றிருக்கும் குமாரக் கோவிலென்னும் திவ்விய ஸ்தலத்தில் கடந்த கார்த்திகை மாதம் கடைசி சுக்கிரவாரத்தன்று நடந்த காட்சியை என்னவென்று சொல்வேன்! மனமோ பதறுகிறது, கைகாலோ நடுக்குகின்றன.

புண்ணிய சீலர்களே! நாடார் வகுப்பைச் சேர்ந்த ஒரு பக்தன் குமாரக் கடவுளுக்கு அக்கினிக்காவடி அபிஷேகம் செய்ய வேணுமென்றுள்ள பக்தி மேலீட்டாலும் சுவாமி மேற்படி பக்தனுக்கு சொற்பனத்தில் சொன்ன உத்திரவினாலும் தனது வகுப்பைச் சேர்ந்தவர்களிடம் காணிக்கையாக ஏராளமான பொருள் வசூல் செய்தும் நாடார் குலத்தவர்களை உதவி கேட்டுக்கொண்டதின்பேரில் 7-8 கோட்டை அரிசி சமைத்து அன்னதானஞ் செய்தும் காவடியை அபிஷேகம் செய்து அநேக மேளதாளங்களுடனும் பக்திரஸங்களுடன் படை சூழ்ந்து வந்த காட்சியை யாரால் வருணிக்க முடியும்!

அக்கினிக்காவடி அபிஷேகம் நாடார் குலத்தவர்கள் கொண்டாடப் போகிறதாக 10-15 தினத்திற்கு முன்னதாகவே ஊரெல்லாம் பரவி விட்டது. மேற்படி சுக்கிரவாரத்தன்று காவடியில் சம்பந்தப்படாத நாடார் வகுப்பார்களும் இதர ஜாதி இந்துக்களும் பதினாயிரத்திற்கு மேலான ஜனங்கள் குமார கோவிலென்னுமூரினில் கூடிவிட்டார்கள். இந்த சிறு கிராமம் அதற்கு இடம் போதாமையால் ஜனங்கள் வீட்டுக் கூரையின் மேலும் மரங்களின் மேலும் மலைகளின் மேலும் 12-மணி சமயம் சூரியாக்கினியை தாங்கிக்கொண்டு காவடியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இப்படியிருக்க காவடிகொண்டுவருகிற பக்தன் அக்கினி முழுதும்போது யாதாவது இடையூறுகள் நேரிட்டால் அவரது மனைவி மக்கள் அக்கினியில் பிரவேசிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கவே 3-4டன் விறகுகளைக் கொண்டுவந்து அக்கினி குண்டத்திலிட்டு தீமூட்டி இது ஒருபக்கம் வளர்ந்துகொண்டிருந்தது. ஆயுதபாணிகளான போலீஸ் பந்தோபஸ்து தடபுடலாய் நடந்துகொண்டிருந்தது. மணியும் ஒன்றாகிவிட்டது. கோவிலுக்கு மேற்கே காவடியும் அதைச் சூழ்ந்த பக்தர்களும் வருகிற ஓசையும் ஸ்தலத்திலிருந்த பதினாயிரக்கணக்கான பேர்களுடைய குதூகலமும் சேர்ந்து கடலொலி போலிருந்தது.

இச்சமயம் நாடார் குலத்தவர்களெல்லோரும் கோவிலுக்குள்ளே போக எத்தனித்திருக்கிறார்களாம் என்றவதந்தி அதிசீக்கிரத்தில் பரவிவிடவே போலீஸ் மேலதிகாரி பக்தனிடம் சென்று ஜனக்கூட்டமதிகமாக யிருப்பதால் நீயும் 10-15 பேரும் போகலாம் மற்றப்பேர்கள் போகலாகாதென்று உத்திரவு கொடுத்தார். பக்தன் மீறி என்னோடு வந்தவர்களும் கூடவே சந்நிதானத்தின் வழியாகப் போய் அக்கினியி லிறங்கும்படியாக, முருகக்கடவுளினுடைய உத்தரவு. போகத்தான் செய்வோமென்று வாதாட்டம் நடந்தது, போலீஸ் அதிகாரி அவர்களை விடாமல் வந்தவழி பார்த்துக் கொண்டோவேதே கல்லமார்க்கமென்று துரத்திவிட்டார்கள். இது சங்கதி கேட்டதும் கூடியிருந்த இந்து மல்லர்கட்கு வந்து விட்டதையா ஆவேசம்.

நடக்குதய்யா ஊருக்குள்ளே நாலுதெரு வீதியிலும் வேலிபோல் ராக்ஷதர்கள் நின்றனர். திடீரென்று அமளி புறளியாக அடிபிடி கைச் சண்டை கால் சண்டை கைக்குத்து கால்குத்து மோவாய்க்குத்து உச்சிக்குத்து நெஞ்சுக்குத்துபுயக்குத்துக் கம்புகள் தடிகள் தடபுடலாய்நடக்கிறது. ஐயோ! ஐயோ!வென்னும் சப்தம் அதிகரித்து விட்டது. இது மட்டுமோ அவர்களுடைய விலையுயர்ந்த பட்டுகளும் துப்பட்டாக்களும் உடுத்தியிருந்த வஸ்திரங்களும் மரங்களிலும் செடிகளிலும் வீட்டின் கூரைகளிலும் தொங்குகின்றதைப் பார்த்தால் யாரால் சகிக்கமுடியும். அம்மணமாய் அநேகர் ஓடுகிறார்கள். கண் போச்சே! காதுபோச்சே!! அடிபொறுக்க முடியவில்லையே!! என்றநேகர் ஓடுகிறார்கள். எந்தப்பக்கம் போனாலும் இவ்வித அலங்கோலமும் அடியும் பிடியுமானால் எப்படித் தப்பமுடியும். வேறு சிலர் அடிபட்டும் மிதிபட்டும் வஸ்திரங்களை இழந்தும் அவமானப் பட்டும் வெளியே போக மார்க்கமன்னியில் ஊருக்கருகாமையிலிருந்த குளத்தில் சாடி நீந்தி அக்கரை சேர்ந்து ஓடினர் இந்த அநியாயங்களை விஸ்தரித்தெழுத போதினி இடந்தருமோ வென்றஞ்சி ஆயிரத்தி லொருபாக மெழுதலானேன். ஜனங்கள் அழுத கண்ணும் சிந்தையுமாக ஓடுகிறதையும் நிற்கின்றதையும் கிடக்கிறதையும் குழந்தைகளைப் பிரிந்தும் மனைவி மக்களைப் பிரிந்தும் சகோதரர்களைப் பிரிந்தும் பர்த்தாவைப் பிரிந்தும் அழுகிற அழுகையும் படுகிற அவஸ்தையையும் பார்த்தால் பேயுமிரங்குமே! பாவிகள் இந்தப் பாதகச் செயல்களைச் செய்யாதீர்கள் செய்யாதீர்கள் என்றால் கேட்கிறது யார்? பிள்ளைமார்களே! உங்களுடைய மனமானது இரும்போ கல்லோ வச்சிரத்தாலோ பாவிகளே! அடியாதேயுங்கள்! மேலும் மேலும் உபத்திரவம் செய்தீர்களென்றால் யார் கேட்கிறது?

தேசாபிமானச் செல்வர்களே! மதாபிமான மன்னர்களே! மடாதிபதியான மாயர்களே தாங்களா செய்கிறீர்கள்? இதுதானோ நம்இந்து மத தர்மம்? மற்ற மதங்களினுடைய தேவாலயங்களுள் இது போன்ற சம்பவம் நடந்ததாக கேள்விப் பட்டிருக்கிறீர்களா? காந்தியடிகளினுடைய உபதேசமிதுதானோ! மத சகோதர ஒற்றுமையு மிதுதானோ, தான் தோன்றி பிராமணர்களே! பிள்ளைமார்களே! உங்களுக்கு என்றுதான்நற்புத்திவருமோ! கோடானுகோடி இந்துக்களில் நீங்கள் சாதித் துவேஷங் கற்பித்து எத்தனையோ கோடி இந்துமக்களை அன்னிய மதத்தில் புகவிடுத்து இழந்தீர்கள். இது ஞாயந்தானோ இதோபாருங்கள் நம் தேசத்திலுள்ளது போல் அன்னியதேசங்களில் ஜாதிபேதம் இல்லை அதுதான் உலகமுழுவதும் கிறிஸ்தவ மதத்தை பரவச்செய்தது. அதைக்கொண்டே இன்னும் பாக்கியிருக்கிற இந்துக்களையும் விழுங்கப் பார்க்கிறார்கள். அவர்கள், இந்தியாவில் ஜாதித்துவேஷ மதிகமிருக்கிறது; பிராமணர் பிள்ளைமார் இன்னும் கொஞ்சமேலான ஜாதிக்காரர்கள் மாத்திரம் ஆலயங்களில் போகலாம், மற்றவர்கள் போகக்கூடாதாம்; நாம் சரியானபடி வேட்டையாடலாமென்று இந்தியர்களைக் கொள்ள வந்துவிட்டார்களையா பாதிரிமார்கள். அமெரிக்கா பாதிரிகளொரு பக்கமும் லண்டன் பாதிரிகளொருபக்கமும் ரக்ஷண்ணிய சேனை பாதிரிமார்கள் மற்றொரு பக்கமும் இத்தாலி பாதிரிமார்கள் ஒரு பக்கமும் இவர்கள் நாலாபக்கமும் பரந்து கோடிக்கணக்கான பணங்களை வாரியிறைத்து இந்தியர்களை கொள்ளைகொள்ளுவார்களே.

காருண்ணிய முன்னவர்களே! வேண்டிய பூமிகளையும் ஏராளமான திரவியங்களையும் மடத்திற்கென்று தானஞ்செய்து அதிபதிகளையும் ஏற்படுத்தியது எதற்கோ உண்டு உடுத்தி உல்லாசமாய் காலங்கழிக்கவும் ஊருக்கு ஊர்சென்று சங்கீத வித்வான் நர்த்தனக் காரர்களுக்கு நகைகள் கொடுக்கவும் பணக்காரர்களை புகழ்ந்து பவுன்களை வாரிக் கொண்டு போகவுமா மடாதிபதி தம்பிரான்களை ஏற்படுத்தினது.

33-கோடி மக்களையும் கோழிக் குஞ்சுகளைப் போல் பாதுகாக்கும்படி யல்லவா நியமித்தது. அதிகாரம் வந்தவுடன் அடக்கியாளலா மென்று எண்ணியிருக்கிறீர்களா? பருந்துகள் வட்ட மிடுகின்றன. ஜாக்கிரதை ஜாக்கிரதை.

இன்று முதல் எல்லா ஜாதிக்காரரும் யாதொரு ஜாதிவித்தியாச மன்னியில் ஆலயங்களில் சென்று கடவுளை வழிபடலாமென்று பறையறைவித்தும் பத்திரிகைகளிலும் பிரசங்க மேடைகளிலும் குக்கிராமங்களிலும் சென்று பிரசங்கமாரி பொழிந்து தங்களுடைய வித்வத்தைக் காட்டுவீர்களாகில் அந்த க்ஷணமே நம் இந்தியாவில் அன்னிய மதம் அடியோடழியுமே? ஆதவனைக் கண்ட பனி போலாகுமே! கோழிகுஞ்சுகளைக் கவர வட்டமிட்டுத் திரியும் கழுகுகளெல்லாம் பறந்தோடுமே! சுயராஜ்யம் சொல்லாமல் வருமே! பிராமணரல்லாதவர் வழக்கொழியுமே! ஒத்துழைப்பவர் ஒத்துழையாதவ ரில்லாமல் போமே! குமார கோவில் காவடிச் சண்டை இல்லாமல் போமே! ஒரு காலத்திலும் சிறை செல்ல வேண்டாமே! 33-கோடிகளும் ஆலய சமத்துவத்தால் ஒன்றாக வாழலாமே இதுபோன்ற நற்காரியங்கள் ஆலயசமத்துவமொன்றில் மட்டும் நடந்தேறி விட்டால் மற்ற சுயராஜ்ய பதத்திற்கு வேண்டிய காரியங்களெல்லாம் தானே வந்து கைகூடிவிடுமே! மேலான ஜாதியென்ற பிராமணர் பிள்ளைமார் முதலானவர்கள் வெறுப் பார்களாகில் தீவாந்திரங்களில் சென்று வசிக்கட்டுமே! இந்துமதமுண்டாகி இத்தனை வருஷமென்று கணக்கிடுவார்களாகில் சூரியனுஞ் சந்திரனுமுண்டான காலையும் கணக்கிடுவார்கள். இவர்கள் மாபாவிகள் தான். இதை விழுங்கிக்கொண்டும் விழுங்க வாயைத் திறந்துகொண்டு மிருக்கிறதைப் பார்த்துக் கொண்டுதானே யிருந்தார்கள். இருக்கிறார்கள். அதனால் தான் அவர்களை தீவு தீவாந்திரங்களில் சென்று வசிக்கும்படி சொன்னது. கோபங் கொள்ளாமல் சகோதரர்களே ஆலய சமத்துவம் எல்லாருக்கும் பொது வென்றும் எல்லாரும் ஆலயத்தில் கடவுளை தெரிசிக்கலா மென்றும் பறையறைவியுங்கள் ஒன்றும் குறையாது. நிறைவா நிற்கும் பொருளுக்கு யாதொரு கெடுதியும் வாராது. பயப்பட வேண்டாம் எங்கும் நிறைந்த ஏகபரம் பொருள் கிருபை செய்வாராக.

குறிப்பு:—" ஸமரஸபோதினி " யில், கனம் லெட்சுமண பிள்ளையவர்கள், உண்மைத்தன்மையோடும், தன் மனசாக்ஷியை மதித்தும், தயதாக்ஷண்யமின்றி, தாரதம்மியங்களை எடுத்துக்காட்டி, அநியாய பழக்கவழக்கங்களை அடியோடு விட்டொழிக்கவேண்டுமென்றும், ஆதி பகவானின் சந்நிதியில், உண்மைப் பக்தனின் கோர்த்திக்கடன் நிறைவேறுமல் இடையூறு விளைவித்த ஜாதித்துவேஷப் போலிகளை எச்சரிக்கையுடன் கண்டித்து இந்துகளுக்கு அறிவுறுத்தி, எழுதியிருக்கும் வியாசத்தின் விஷய சாரங்களனைத்தையும், ஏகோபித்து ஒப்புக்கொள்ளுகிறோ மாயினும், இடையில் கிறிஸ்தவமதத்தை சுட்டிக்காட்டி எழுதியிருக்கும் பாகத்தை முற்றும் புறக்கணித்து விடுவதோடு அவரின் அதுபற்றிய தப்பபிப்பிராயத்தை அழுத்தமாய்க் கண்டிக்காம லிருக்க முடியவில்லை. இந்து மதத்திலிருக்கும் கோடிய பழக்க வழக்கங்களாலும்; அகங்காரத்தினாலும் அனுஷ்டிக்கப்படும் அநியாயச்செயல்களுக்கும், கிறிஸ்தவ மத நிகழ்ச்சிக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது என்பது நமக்கு விளங்க வில்லை கிறிஸ்தவ மதப் பாதிரிகள், தங்கள் மதக் கடமையை உணர்ந்து, தேசோபகாரமாய்ச் செய்கிறதையும், இந்து மத மடாதிபதிகளும், இந்துக்களில் பெரும்பான்மையோர் தங்கள் மதக்கடமையைச் செய்யத்தவறி, மடத்தனமாய் நடந்து கொள்ளுவதையும் சீர்தூக்கி, ஆராய்ந்து அறிந்திருப்பாராகில், "எழுதமாட்டாதவன் எழுதுகோலைப்பழித்தது"போலவும், 'நடக்கமாட்டாதவன் கால்களைப்பழித்தது"போலவும்இந்து மதஸ்தர்களின் அசட்டுச் செய்கைகளின் மேலுள்ள கோபத்தைக் கொண்டு, கிறிஸ்தவமதத்தையும், பாதிரிமார்களையும் தாக்கியெழுதியிருக்க மாட்டாரென்றே நாம் நினைக்க வேண்டியதிருக்கிறது நமது கிறிஸ்தவ சகோதரர்களும் பாதிரிமார்களும் கனம் பிள்ளையவர்களின் அவதூறுக்கு, எவ்விதத்திலும், எத்தோரணையிலும் எப்பொழுதும் ஆளாக மாட்டார்கள் என்பதை அறிவிக்கிறோம். ஆகையால்நமதுகனம்லெட்சுமண பிள்ளையவர்களைப்போலொத்த இந்து மதாபிமானிகள் இன்றே வெளிக்கிளம்பி சீர்திருத்தத்திற்கு வேலைசெய்வார்களானால், இந்து மதத்தின் தன்மையையும்மேன்மையையும் உலகத்தோர் அறிவதோடு இந்துமதம் மலைமேலிட்ட தீபம்போல்பிரகாசிக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை,

பத்திராதிபர்—
நாடார்குல மித்திரன்-

மனோநந்த மஞ்சரி.

சதிபதிகளின் சம்பாஷணை.

பிராண காந்தா! பிறைமுடி சூடிய பெம்மானே! காலமுழுதும் பிச்சை யெடுக்கும் பிழைப்பே நமக்குப் பெரிதாய் விட்டது. வயிற்றுக் கேற்ற சாதம் கிடைப்பதும் பிரமாதமாய்விட்டது. பாக்கியம் பலதும் பெற்ற மலையரசன் மகளாக நான் பிறந்தும் ஒட்டாண்டியாகிய உம்மை மணந்து, சோற்றுக்குத் திண்டாட்ட மென்றால், மற்ற வரிசையைச் சொல்லவும் வேண்டுமோ இந்தப் பிழைப்புக்கு எனக்கும் இரண்டுபிள்ளையா?

எனது காதற்கனியே! கடலாடையுடுத்த கண்ணே! கலக்கம் விடுக. தாந்தாமன் செய்தவினை தாமே யனுபவிப்பார். என்பதை மறந்தனையோ? எனது பிச்சைக்காரப் பிரபுடிகத் தன்மையைத் தெரிந்தும், எனது இன்ப துன்பத்தை அன்போடு அனுபவிக்க மனமுவந்தும், மானிலமறிய மாலைசூடிக் கொண்டு இப்போது இப்படிக் கூறலது உன்போன்ற உத்தம ஸ்திரிகளுக் கழகோ?

நாயகா! நானாஜீவ கோடிகட்குத் தாயகா! பெண்புத்தி பின்புத்தி யென்னும் பேதை மதியால் ஏதோ பினத்தினேன் பிழை பொறுத்தருள்க. ஆயினும் நமது பிள்ளைகளிருவரும் பெரியோராய்விட்டனர். இருவருக்கும் ஏற்ற பெண் பார்த்து மணமுடிக்க வேண்டும். கையில் காசுமேல் படிந்த தாசுமில்லை. தரித்திர நிலையில் அதிலும் பிச்சை வாங்கிப் புசிப்பது லஜ்ஜையா யிருக்கிறது. ஆகவே ஏதாவதொரு தொழில்செய்து ஜீவனம் நடத்தக் கூடாதா?

அன்பிற்கரசியே! ஆனந்தச் சரசியே! அங்கயற் கண்ணே! எனது சிறு பிராய முதல் பழகித் தெரிந்துகொண்ட தொழில் இது ஒன்றே. இதைவிட்டு வேறு தொழில் செய்யவுந் தெரியாது. செய்வதற்குக் கைமுதலில்லை. என்செய்வேன் நீயேயிதற்கொருபாயம்சொல்ல வேண்டும்.

கண்ணாளா! விண்ணவர் போற்றும் வித்தகா! இப்பெரிய மண்ணுலகுக் காரணனை என் தமையன் கோபால கிருஷ்ணனிடம் ஒருவேலி நிலம் வாங்கித் தருகிறேன். உமது நண்பன் குபேரனிடத்தில் விதை வாங்கிக் கொள்ளலாம். எனது பெரிய தமயன் பலராமனிடம் கலப்பை இரவல் வாங்கிக்கொள்ளலாம். நம்மிடம் மாடொன்றும் புலியொன்றும் இருக்கிறது. இவ்விரண்டையும் கலப்பையில் பூட்டிவிடலாம். நீர் நிலத்தை உழுதுவிடும். பிள்ளைகளிருவரும் (கணேசன் கந்தன்) களும் தண்ணீர் இறைப்பார்கள். நான் நீர் பாய்ச்சி பாத்திகட்டி நெல் விதைத்து விடுகிறேன். விளைந்து வரும் நெல்லைக்கொண்டு ஜீவிக்கலாம். விவசாயத்தைவிடச் சிறந்தது வேறொன்றிருக்கிறதா? உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு மற்றோர் பணிந்து. என்பதைத் தாமறியாதவரா?

தேவியே! சிந்தைக்கிசைந்த சிவகாமியே! ஜீவாதாரச் செந்தேனே! உனது மனப்படி செய்வதற்குத் தடையில்லை. என்றாலும், வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும் என்றபடி மழையில்லா விட்டால் வயல்விளையாது. பின் நமது தேக கஷ்டம் வீணாகும். தவிரவும் விளைவு செய்வதற்கேற்ற பொருள்களை அவரவரிடம் போய் கேட்பதும் பிசகு. தோழனோடும் ஏழைமைப்பேசேல். என்பது போல் நாம் பிச்சை எடுத்தாலும் நமக்கு கௌரவக் குறைவு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆதலின் அகஸ்தியர் வைத்திய சாஸ்திரம் படித்திருக்கிறேன். அந்த முறைகளைக்கொண்டு சில ஔஷதங்கள்தயார் செய்து வைத்தியஞ் செய்வேனாகில் தக்க லாபங் கிடைக்கும். அதைக் கொண்டு ஜீவனம்சையை நடத்தலாம் என்று சதிபதி யிருவரும் பேசிக் கொண்டு வைத்தீசுரன் (புள்ளிருக்கும் வேளூர்) கோவில் வந்து, வைத்தியநாத சுவாமி எனப் பெயர் வைத்துக்கொண்டு வைத்திய உத்தியோகம்செய்து வயிறு வளர்த்து வருவதைக்கண்ட தமிழ்ப் புலவரொருவர், அவ்வூர் பிரஜைகளைப் பார்த்து, மகாஜனங்களே! உங்கள் வைத்தியநாதீஸ்வரருக்கு!

வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறாம் புத்திரருக்—கோதக்கேள்
வந்தவினை தீர்க்கவகையறியார்வேளூரார்
எந்தவினை தீர்ப்பா ரிவர்.

என்று பரிகாசஞ் செய்வதறிந்த வைத்தியநாதப்பிரபு, தமது மனைவியின் மதிமுகத்தை நோக்கி, காதலி! வித்வான் வார்த்தை உண்மைதானோ இனியிதற் கென்செய்வேனென, புலவர் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் அம்மையின் தேகத்தைக் கட்டித் தழுவி அர்த்த பாகத்தில் அமர்ந்து கொண்டாராம். இத்தம்பதிகளின் திருவிளையாடல் நம் பங்கில் இருக்கட்டும். நல்லூர்நண்பன்.

இரங்கூன்

விஜயம்.

நமது மித்திரன் அதிபர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடாரவர்கள் ஜனவரிமீ 16உ இலங்கையிலிருந்து, இரங்கூனுக்கு கப்பல் மார்க்கமாய் நமது கௌரவ மானேஜர் ஸ்ரீமான் T. கருப்பையாபிள்ளையவர்களுடன் புறப்படுகிறார். ஆகையால் இரங்கூனிலுள்ள நமது குலாபிமானிகள், கண்ணியமுடன் வரவேற்றுபசரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

மானேஜர்,
நாடார்குல மித்திரன் ஆபீஸ்.

நாடார்குல மித்திரன்
துந்துபிஸு மார்கழிமீ 27உ

இலங்கை.

சரித்திர பூர்வமாக ஆதிகாலந் தொட்டு நம்மிந்தியா தேசத்தோடு சம்பந்தப்பட்டிருந்த இலங்கையை தற்சமயம் நமது பிரிட்டீஷ் கவர்ன்மெண்டாரவர்கள் அதை ஒரு குடியேற்ற நாட்டைப் போல் ஆண்டுவருகின்றார்களென்பது யாவரும் அறிந்த விஷயம்.

இவ்விலங்கையில் 1911௵த்து ஜனக்கணிதப்படி மொத்தம் ஜனத்தொகை 4105533. இதனுள் சிங்களவர் தொகை 2714614, தமிழர் 1059354, சோனகர் (மகம்மதியர்) 266454, மலேயர் 13089, வெட்டா 5342, பரங்கிக்காரர் 26857, ஐரோப்பியர் 7625, மற்றவர்கள் 12198, என்பதாகத் தெரிகிறது.

நாம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தக்கால் சுமார் ஒருமாதம் வரையும் இலங்கைப் பிரதேசங்களுள் பல முக்கியமான இடங்களைச் சுற்றிப்பார்த்தோம். உயர்ந்த மலைகளுக்குஇயற்கை அழகாயமைந்துள்ள அண்டமளாவிய மரங்களின்றி எங்கே பார்த்தாலும் ரப்பர் மரங்களும், தேயிலைச் செடிகளுமே காணப்படுகின்றன. மலையடி வாரங்களில் அழகிய தென்னை மரங்கள் ஓங்கிவளர்ந்து பந்திபந்தியாய் நிற்கும் பான்மைகண்களைக் கவரத்தக்கதாயிருக்கிறது. கிராமங்களிலுள்ள ஜனங்களின் வாசஸ்தலங்கள்தேகாரோக்கியத்திற்கு மிகப்பொருத்தமுள்ளவைகளாயிருக்கிறது. முக்கியமாய் இந்நாட்டின் விளை பொருட்களாவது தேயிலை, ரப்பர், கொக்கோ, தேங்காய், பாக்கு, கருவாப்பட்டை, மினரங் (ஒருவகை உலோகம் பூமிக்குள் குடைந்தெடுப்பது)முதலியவையே. இவைகள்எல்லாம்அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடியதே. இப்பொருட்கள் ஏற்றுமதியில்லையானால் இலங்கையின் செல்வமே பாதிக்கக் கூடும். மேலும் இப்பொருட்களே இந்நாட்டின் முக்கியமான விளைபொருட்களா யிருப்பதால் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களும் அணியும் ஆடைகளும் வெளியிலிருந்தே வந்தாக வேண்டியதிருக்கிறது. கொஞ்சநாளேனும் கப்பல் வரத்தவறினால் உணவுப்பொருள்களின்விலைமிகவேறிவிடுகின்றன. உபயோக மில்லாமல் விட்டிருக்கும்காடுகளைபணபடுத்தி உணவுப்பொருட்களை அதிகமாய் விருத்திசெய்ய வேண்டியதை, உள்நாட்டு அரசிகள் அதிகங் கவனிப்பதாய்த் தெரியவில்லை. ஆனாலும் வடபாகத்தில் இப்போது நெல்ச்சாகுபடி செய்யத்தகுந்த யேற்பாடுகள் செய்வதாய்த் தெரிகிறது. அதுவும் குடியேறிய தமிழ் ஜனங்கள்தான் அவ்வேலையை ஆரம்பித்திருப்பதாகவுஞ்சொல்கிறார்கள். கதிர்காமத்துக்குச் செல்லும் வழியருகே மிகவிஸ்தீரணமுள்ள ஒருகாட்டைப் பண்படுத்தி பருத்தி பயிர்ச்செய்யப்பட்டிருக்கிறது. நம்மிந்தியக் காடுகளைப்பார்க்கிலும் அவை வெகு செழிப்பாய்த் தோன்றியது. அங்ஙனம்கூடியிருக்கும் ஜனங்களை, இப்பருத்திப்பயிர்க்காடு யாருடைய தென்று கேட்க ஒருவரும் உண்மை சொல்லவில்லை. தங்களுக்குத் தெரியாதென்றே சொல்லி விட்டார்கள். அது ஒரு ஐரோப்பியரால்த்தான் சாகுபடி செய்யப்பட்டிருக்கும் போலும். தேயிலைத் தோட்டங்கள் ரப்பர்த்தோட்டங்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களால் தான் பயிற்செய்யப்பட்டு வருகிறது. அத்தோட்டங்களில் வேலைசெய்யும் கூலிகளனைவரும் இந்தியத்தமிழ்ச் சனங்களாகவேயிருக்கிறார்கள். அவர்கள் உயர்ந்த மலைகளில் அச்சமின்றி நடந்து செல்வதையும் மகா கஷ்டத்துடன் அவர்கள் செய்யும் வேலைகளையும் கவனித்தோம். வயது சென்ற ஆடவர்களும் பெண்டிர்களும் 7-8-வயதுள்ள சிறுகுழந்தைகளும் வேலை செய்வதைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. அவர்களிற் சிலரிடம் சம்பாஷணை செய்துபார்த்ததில் தாங்கள் சந்தோஷமாயும் சுகமாயும் வசிப்பதாகவும் நல்லசம்பளங் கிடைப்பதாகவும் முன்னிருந்த கஷ்டம் இப்போது கிடையா தென்றுஞ்சொல்லுகிறார்கள். அவர்கள் வசிக்குமிடங்களை நாம் பார்த்தமட்டும் மனிதர் வசிக்குமிடமென்றும் சொல்லவியலாது. மேலும் கூலிகள் விஷயத்தில் இலங்கைக் கவர்ன்மெண்டார் வேலை செய்யும் நேரத்தைக் குறைத்திருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால் ஒருதினத்தில் குறித்த நேரம்தவிர பாக்கியிருக்கும் நேரத்துக்கு வேலைசெய்தால் செய்வதற்கேற்ற சம்பளம் பிரத்தியேகமாய் தோட்டக்காரர்கள் கொடுக்கிறார்களாம். மீதியுள்ள நேரத்தில் வேலைக்கேற்ற சம்பளமென்றிருப்பதால், அவர்கள் அதிகம் சம்பளங் கிடைக்க வேண்டுமென்ற ஆவலுடன் அதிகமாக வேலைசெய்கிறார்கள். இதைக் கொண்டுதான் நல்ல சம்பளங்கிடைக்கிறதென்று சொல்வதாய்த்தெரிகிறது. அதிக வேலை செய்து அதிகச்சம்பளம் பெறுவது ஆச்சரியமில்லை முன்னையப்போல் கங்காணிகளால் கூலிகளுக்கிருந்த கஷ்டம் இப்போது இல்லையென்பதாகவுந் தெரிகிறது. நாம்பார்த்த பல்லாயிரஞ் ஜனங்களில் நூற்றுக்கு பத்துப்பேராவது சுகசரீரிகளாகத் தோன்றவேயில்லை, அவர்களுக்கு என்னசம்பளம் கிடைத்தபோதிலும் இந்தியாவுக்குத் திரும்பும்போது அதிகமிச்சங்கொண்டு வருவார்களென்று எண்ணமுடியாது, ஏனெனில் கூலிகளெல்லாம் உயர்ந்த மலைப்பிரதேசங்களில் தோட்டக்காரர்கள் வசிக்கும் பங்களாக்களுக்கும் தேயிலை ரப்பர்களை பக்குவப்படுத்தக் கூடிய தொழிற்சாலைகளுக்கும் தூரத்தில் அமைக்கப்பெற்ற குடிசைகளில் வசிக்கின்றார்கள். அங்கங்கே உணவுப் பொருட்களை சேகரம் செய்து கொடுக்கும் சிற்சில வியாபாரிகள் கடைகளுமிருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு தேவையானதை அக்கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியதாயிருக்கிறது. தவிர தோட்டங்களிலிருந்து வரும் முச்சந்திப்பாதைகளில் சீமைச்சாராயக்கடை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இவை கூலிகளுக்காகவே ஏற்பட்டிருக்கிற தென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகவே இவர்கள் கஷ்ட ஜீவியத்தால் யாதொரு பிரயோசனத்தை அடையார்களென்பது நன்குவிளங்குகிறது. தவிர இலங்கை வந்திறங்கும் பிரயாணிகளுக்கு கொழும்புத் துறைமுகத்தில் மிகுந்தகஷ்ட மிருப்பதாய்த் தெரிகிறது. குறுகிய ஒரு கட்டடத்தில் ஆடுமாடுகளைப்போல் அடைத்து, வைத்து பரிசோதனையிடுவோர் வீணாக காலதாமதப்படுத்தி வைக்கிறார்கள். நாம் வந்திறங்கும்போது சௌந்தரகாந்தி என்னும் நாவல்கள் எம்முடைய பெட்டிக்குள்ளிருந்த 25 புத்தகங்களை எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு இது காந்தி என்ற பெயரோடிருப்பதால் விடமாட்டோமென்று மூன்று மணிநேரம் நிறுத்திவிட்டார்கள். காந்தியின் சரித்திரமல்ல இதுவொரு பெண்ணைப்பற்றிய சரித்திரமென்று எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை அப்பால் யாழ்ப்பாணத்து தமிழர் ஒருவர் அப்புத்தகத்தைப்படித்துப் பார்த்து சமாதானம் சொன்னபின் இரண்டு ரூபாய் பத்துச்சதம் தீர்வை வாங்கிக் கொண்டுவெளியேற்றி விட்டார்கள். காந்தியென்றாலே தேகம்காந்தும் போலும். நாடார்களில் சுமார் இருபதினாயிரம்பேர்கள் வரையும் கொழும்பிலும் நாட்டுப் புறங்களிலும் வசித்துவருவதாகத் தெரிகிறது சுமார் 30 வருஷங்களிலிருந்து நாடார் ஜனத்தொகை வரவர அதிகரித்தும் வர்த்தகம் தொழில் முதலியவைகளில் விர்த்தியாகியும் வந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ நாடார்கள் பலர் கல்வி இலாக்காவிலும்காட்டிலாக்காவிலும் உத்தியோகம்வகித்துவருவதாகவும் அறிகிறோம் கொழும்பு புறக்கோட்டையில் பிரபல சாக்கு வர்த்தகர்கள் அநேகரிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி அநேக ஜனங்களுக்கு ஜீவியத்திற்கு மார்க்கமிருப்பதாக அறிந்து சந்தோஷிக்கின்றோம். இலங்கை இந்திய க்ஷத்திரிய நாடார் சங்கம் ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது. இச்சங்கம் நாடார் சமூக விஷயத்திற்காக எவ்வளவு தூரம் பாடுபட்டிருக்கிறது, என்னென்ன வேலைகள் இதுவரையும் செய்து வந்திருக்கிறதென்பதை சமயம் வாய்ப்பின் மறுமுறையும் ஆராய்ந்து விரிவா யெழுதுவோம்.

அறிவிப்பு.

நமது சுற்றுப் பிரயாண ஏஜெண்டுகள் சுற்றுப் பிரயாணஞ் செய்து ஆங்காங்கிருந்து எழுதுவதிலிருந்தும், மற்றும் நமது மித்திராபிமானிகள் ஆங்காங்கிருந்து எழுதும் கடிதங்களிலிருந்தும் தற்சமயம் அறுவடை காலமாயிருப்பதால் கிராமாந்திரங்களில் பணக் கஷ்டமாய் இருக்கிற தென்று அறிகிறோம்.

ஆனால், நாட்டின் நிலைமையையும் காலத்தையும், நேரத்தையும் அனுசரித்தே நாமும் பணவசூல் செய்யவேண்டியதிருக்கிறது. ஆகையால் சிற்சில முக்கிய ஊர்களுக்கும். நகரங்களுக்கும் தவிர கிராமாந்திரங்களுக்கு மாசிமீ 15 தேதிக்குமேல் வி. பி. அனுப்பப்படும் (ஆனால் இதற்கு முன்னதாகவே மணியார்டர்மூலமாய் சந்தா தொகையை அனுப்பினவர்களுக்கு ஆறு அணா விலை மதிப்புள்ள விருதுபட்டி ரிப்போர்ட்டு புஸ்தகம் இனாமாக அனுப்பப்படும்.) ஆகையால், கிராமாந்திரங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள் நன்குகவனித்து மாசிமீ 15 தேதிக்குமேல் அனுப்பப் போகிற வி.பி. களை திருப்பிவிடாமல் எதிர்பார்த்திருந்து பணங் கட்டி பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம். மானேஜர்.

குறிப்புகள்.

திருத்தம்.

சென்ற டிசம்பர் மீ 21-ந் தேதியில் வெளிவந்த நமது மித்திரனின் தலையங்கத்தில் 2-வது கலத்தில் 40-வது வரியில் "வேண்டுகின்றோம்" என்றிருப்பதை காண்கின்றோம் என்று திருத்தி வாசிக்கவும்.

நாசவேலையும், நிர்மாண வேலையும்.

நம் மகாஜனங்களில் மிகச் சிறபான்மையோர் கால மாறுபாட்டினால் கைக்கொண்டிருந்த, கள்த்தொழிலை அறவே விட்டொழிக்க வேண்டுமென்று மகாநாடுகளில் நிர்மானித்ததற்கிணங்க, அத்தொழிலைஅநேகமாய் விட்டுவிட்டார்கள் என்பதை நாம் அறிவோம்.

அவர்கள் ஜீவனார்த்தமாய் கைக்கொண்டிருந்த தொழில் இழி தொழில் என நினைத்தும்நமது குல தர்மத்திற்கும் பெருமைக்கும் சற்றும் ஏற்காத அத்தொழிலை நாசம்செய்து விடவேண்டுமென்றும் எல்லோரும் ஏகோபித்துநின்றோம். அப்படியே அத்தொழிலை அநேகமாய் நமது குலத்தவர்களுக்கு சிறிதும் சம்மதமில்லாதபடி, நாசம் செய்வான்வேண்டி, கடந்த இரண்டு வருஷகாலமாய் நமது முழு கவனத்தையும் நாசவேலையிலேயே செலுத்தினோமாயினும், நாசவேலைக்கு பக்க பலமாயுள்ள நிர்மாண வேலையைச் செய்யநாம்பூராவும் மறந்து விட்டோம்.

நிர்மாணவேலை என்றால், அத்தொழிலை விட்டவர்களுக்கு மற்றொரு தொழிலைக் காட்டிக்கொடுத்து அவர்கள் அத்தொழிலை புதிதாக கைக்கொள்ளச்செய்வதே. நாசவேலையைச் செய்யும்போது நிர்மாண வேலையையும் கூடவே செய்து கொண்டு போயிருப்போமாகில், இரண்டு வருடகாலமாய் நமது கவனத்தை அதிலேயே செலுத்தவேண்டியதிருந்திருக்காது. நமது மகாஜன சங்கத்தார்களும், அதினா லேற்பட்ட விவகாரங்களுக்கு பரிகாரம் தேடிக்கொண் டிருப்பதிலே தங்கள் அருமையான காலத்தை கழிக்க வேண்டியது மிருந்திருக்காது. நாம் நாசவேலையை அநேகமாய் பிரசாரஞ் செய்து வெற்றிபெற்று விட்டோ மென்று, இருமாந்ததன்மையாய் உடனே நிர்மாணவேலையாகிய அத்தொழிலை விட்டுவிட்ட உத்தமர்களுக்கு மற்றொரு தொழிலைக் காட்டிக்கொடாம லிருப்போமாகில். "பழைய குருடி, கதவைத் திறடி" என்ற மாதிரியாய் விடுமென்பதை நாம் அறிய வேண்டும். ஆகையால் நாடார் மகாஜனசங்கத்தார் உடனே நிர்மாணவேலையில் தீவிரமாய் ஈடுபட்டு பிரசாரஞ் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வேண்டுகிறோம்.

ஏறல் மகாநாடு.

இம் மகாநாடு, கடந்த இரண்டுவருடங்களாக ஆடி. தை மீ அமாவாசைகள் தோறும் வருட மிருமுறையாக, நடைபெற்று வருகின்றன. நாடார் மகாஜன சங்கத்தார் இம் மகா நாட்டை நடைபெறச் செய்வதில் விசேஷச் சிறத்தை எடுத்துக்கொண்டால் நலமாயிருக்கும், ஏனென்றால், ஷ புண்ணிய தினத்தன்று,நாடார்மகாஜன சங்கப்பிரசாரவேலையைச் செய்வதற்கு இது ஒரு முக்கிய ஸ்தலம் என்பதை யாவரும் அறிந்ததே. ஆகையால் தகுந்த பிரசாரகர்களையும் குலாபிமானிகளையும், முக்கியஸ்தர்களையும் நமது குலத் தலைவர்களையும் பத்திராதிபர்களையும் இம்மகா நாட்டிற்கு விஜயஞ்செய்ய, மகாஜன சங்கத்தாரே தகுந்த ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும். நாடார் மகாஜன சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் M. V. பழனிச்சாமி நாடார், நமது குல பத்திராதிபர்கள் முதலிய தலைவர்கள் விஜயஞ் செய்திருந்த மகாநாடுகள் வெகு சிறப்பாகவே நடைபெற்றதோடு மகா ஜனங்களும் வெகு உற்சாகத்துடன் நடபடிக்கையில் கலந்து கொண்டார்கள் என்பதை ஷ மகாநாடுகளின் நடபடிக்கைகளை நம்மித்திரன்மூலமாயும் நேரிலும் அறிந்த நேயர்களுக்கு நன்கு தெரியும். வருடாவருடம் சங்க உத்தியோகஸ்தர்கள் இம்மகாநாட்டிற்கு விஜயஞ் செய்தால் விசேஷபலன் ஏற்படுமென்று நம்புகிறோம்.

நமது சொந்த நிருபர்.

இலங்கையில் நமது சொந்த நிருபராய் இதுவரையு மிருந்த மிஸ்டர், கெ. கலியாணசுந்தர நாடார் அவர்கள் இந்தியாவுக்குத் தமது சொந்த ஊருக்குப் போயிருப்பதால் இனிமேல் சிலோன் ஒய். யம். சி. ஏ. காரியதரிசியும் குலாபிமானியுமாகிய மிஸ்டர் ஞா. பா. வேதநாயகநாடார் அவர்கள் நமது சொந்த நிருபராயிருந்து வருவார்கள்.

எனதுண்மை.

என் வயது இரட்டையில் இருபதாகிவிட்டது. இப்போது நான் மனிதவர்க்கத்தில் அனுபவிக்கக் கூடாத மகிமை வாய்ந்த மகோன்னத நிலைமையிலிருக்கிறேன். இந்திர போகமே இச்சமயம் என்வயப்பட்டிருக்கிறது. கடல் சூழ்ந்த இப்பெரிய பூமியில் நான் கால் வைக்காத விடமில்லை. சமஸ்த தேசத்துக்கும் ஏகமுகமாகப் பிரகாசிக்கும் சூரியன் கிரணம் படாத இடமிருந்தாலும் இருக்கலாம்; என் காலடிச் சுவடுபாத இடமில்லை என்று திண்ணமாய்ச்சொல்லுவேன். எனது சுற்றுப் பிரயாணத்தில் எழுவித கடலைக் கண்டேன். சொல்வதற் கேலாத வளமமைந்த பெரிய பெரிய மலைகளையும் பார்த்தேன். சப்த ரிஷிகளையுந் தரிசித்தேன். அநேக கார்தர்வ ஸ்திரீகளைக் காந்தர்வஞ் செய்தேன். தேவாமுதத்துக்கு மேலான பதார்த்த வகைகளைச் சாப்பிட்டேன். எனது துணிமணி ஆடையாபரணங்களின் பெருமை அஷ்டதிக்குப் பாலகருக்குங் கிடைப்பதரிது. இந்தப் பெரிய பூமியில் என்னை எந்த இடத்திலுங் காணலாம். நினைத்த மாத்திரத்தில் எந்தவிடஞ் செல்ல வேண்டுமோ அங்கு சென்று, ஆங்காங்கு என்னால் செய்யக்கூடிய வேலைகளைச்செய்து முடிப்பேன். எனது தேசத் தமிழர்களாகிய ஜாதிமதச்சண்டைக்காரர்கள் ஒவ்வொருவரிடத்தும் நெருங்கிப் பழகினேன். அந்தந்த ஜாதிக்காரர்களின் அவிவேகத் தன்மையும். ஜாதி என்னும் பதத்தின் கருத்தையுந் தெளிவுறத் தெரிந்துகொண்டேன். எந்த ஜாதி மனிதனும் என்னிடம் தன் ஜாதிப் பெருமையைப் பேசமுடியாது. அந்தந்த ஜாதிகளின் ஊழல்களை நன்கறிந்தேன். அடடா! இவ்வுலகில் என்னைப்போல் பாக்கிய சாலிகள் இனி ஒருவர் இருப்பார் அல்லது பிறப்பார் என்று நான் கனவிலுங் கருதவில்லை. எத்தனை ராஜாக்கள் என் பின் பற்றித் திரிந்தார்கள். எத்தனை ஜமீன்கள் என்காலைத்தொட்டு கும்பிட்டார்கள் எத்தனை மடாதிபதிகள் என்னைப் போற்றிப் பணிந்தார்கள். எத்தனை கோடீஸ்வரர்கள் என்வரவை எதிர்நோக்கி யிருந்தார்கள். எத்தனை பிராமணர்கள் எனக்கு இதவார்த்தை சொன்னார்கள். எத்தனை தேவாலயங்களைச் சீர்திருத்தினேன். எத்தனை தேசோபகாரச் சங்கம் ஸ்தாபித்தேன். 'லக்ஷக் கணக்கான ஸ்கூல்களையும், ஆஸ்பத்திரி அன்னதான சாலை முதலிய கட்டடங்களை புதுப்பித்தேன். பொன் வெள்ளி நவரத்தினங்கள் விளையக் கூடிய பூமிகளைக் கண்டுபிடித்து அவையனைத்தையுஞ்சொந்தமாக்கிக்கொண்டேன். அநேக தாய் தந்தைகளைக் கண்டேன். மாமன் மைத்துனன் அண்ணன் தம்பி பாட்டன் பாட்டி தங்கைதமக்கை தாரம், சிற்றப்பன் பெரியப்பன் மாமி மைத்துனி முதலிய பந்துக்கள் இந்த தேசமெங்கும் எனக்குண்டு. என் ஒருவன் மாயவலையில் மதிமயங்கி தேச மகாஜனங்கள் பலவித அறிவுகெட்டுப் பின் நல்லறிவு பெற்றனர். மாயக்காரனோ, தேவாம்சனோ திரிமூர்த்திகளில் ஒருவனோ, ஜாலக்காரனோ, பூதம் பிசாசு முனியாண்டி கருப்பண்ணசாமி மொண்டி வீரன் வகையாரவோ? கழைக் கூத்தனோ? மந்திரதந்திரம் கற்றவனோ? அவதார புருஷனோ? கற்பனைக் காரனோ? சித்தர்களில் ஒருவனோ? பகல் வேஷச் சாமியோ? மேல்வேஷப் பண்டாரமோ? வயிற்றுச் சோற்றுச் சந்யாசியோ? இல்லை யோக சாதனனோ? மானிடருக்குள் ஒருவனோ? நான் யாரோ தெரிய வில்லை. ஆனால் உங்களைப் போல் நானும் அழகமைந்த மானிடவடிவுடன் இருக்கிறேன். என்னை யாரோ அந்நிய னென்றெண்ண வேண்டாம். உங்கள் தேசத்து மனிதனே. உங்கள் ஊரில் பிறந்து வளர்ந்தவனே. ஆனால் என்னை யார் பெற்றார்கள்? எப்படிப்பெற்றார்கள், யாருடைய வேலைப்பாட்டால் நான் இந்த வடிவத்துடன் இந்த பூமியில் ஜனித்தேன். என்னைப் பெற்றோரெங்கே? என்பது நாளதும் எனக்குத் தெரியவில்லை. என் வரலாற்றைத் தெரிந்ததாகச் சொல்வோரும் இத்தேசத்திலில்லை. எனினும் எனக்குத் தெரிந்தவரை எனதுண்மை விஷயத்தைச் சொல்லிவருகிறேன். இத்துடன் நிற்கட்டும். மறுமுறை உங்களைச் சந்திக்கிறேன். (தொடரும்)

ச. சு. சங்கரலிங்க நாடார்.

குறிப்பு—இவ்வியாசம் ஓர் புஸ்தக ரூபமாக வெளிவரக் கூடிய வகையில் எழுதிவருவதால் இதன் உரிமை இப்பத்திரிகையின் நிரூபரேயனுன எனக்கே உரியது. உத்திரவன்னியில் மற்ற பத்திரிகையிலும் புஸ்தகங்களிலும் பிரசுரிக்கக் கூடாதென்பதைத் தெரிவிக்கிறேன்.

ச. சு. ச.

இலங்கை வர்த்தமானம்.

க்ஷத்திரியகுல பாலியரின் மனோகர வாசகசாலை.

11-வக்சரச வீதி கொழும்பு

நிகழும் 1922ஆ நவம்பர்மீ 15-ந் தேதி ‘ க்ஷத்திரியகுல பாலியரின்மனோகர வாசகசாலை” என்னும் மகுடம் பூண்ட வாசகசாலையின் ஆரம்பக் கூட்டம் சென்ற 5-12-22ல் மகா-ள-ள-ஸ்ரீ ஆ. அமிர்தமிக்கேல் நாடாரின் அக்கிராசனத்தின் கீழ், பிரபல ஜவுளி வியாபாரியும் கிளப்புக்காரருமான மகா-ள-ஈ-ஸ்ரீ A. M. அந்தோனிமுத்து நாடாரின் வியாபார ஸ்தலத்தின் ஓர்பாகத்தில் சுமார் 60 அங்கத்தினர்கள் கொண்ட சங்கம் ஒன்று கூடலாயிற்று.

I. இவ்வாசகசாலையின் அங்கத்தவர்களுக்கு நம் தாய்பாஷையாகிய தமிழும், ஆங்கிலமும், இலவசமாய்க் கற்றுக்கொடுத்தும் குலசிகாமணிகளை ஆதரிப்பது.

2. இச்சங்கத்தை கூடிய சீக்கிரம் நம் தாய்ச்சங்கத்துக்குக் கிளையாக்குதல்.

3. கொழும்பிலிருக்கும் நம்குல பாலியர்கள் தொழிலின்றி கஷ்டப்படுவோருக்கும், தங்கியிருக்க இடமின்றித் தவிப்போருக்கும், இடம் தந்தும், போஜனத்துக்கு வழியின்றித் திகைப்போருக்கு போஜனம் தந்து உதவுதல்.

4. பாடப் புத்தகத்துடன் நம்குல புத்தகங்களையும் எளிதில் உணரும்படி கற்பித்தல்.

5. வாசகசாலைக்கு நம்குல பத்திரிகைகளை வரவழைத்து ஆதரித்தல். நன்றெனவும், நம் குலத்தவரால் எழுதியுள்ள, குலவிளக்கம் முதலிய புத்தகங்களை ஆதரித்து, நம் குலத்தில், அபிமானமுண்டாகப் போதிப்பதென்றும், அங்கத்தவரின் ஏகோபித்த அபிப்பிராயப்படி, மேல்கண்ட தீர்மானங்களை தீர்மானிக்கப் படலாயிற்று.

1. வடக்கன்குளம், சூ. அமிர்தமிக்கேல் நாடார் காரியதரிசியாகவும்.

2. காவல்கிணறு, எ. ம. வியாகப்ப நாடார் உபகாரியதரிசியாகவும்.

3. காவல்கிணறு, பி. ஞா. மரிய இருதயநாடார் உபாத்தியாயராகவும்.

4. ப. ச. அந்தோனிமுத்து நாடார் பொக்கிஷதாராகவும்.

5. கள்ளிகுளம், அ. ச. மதுரேந்திர நாடார் கணக்குப் பரிசோதகராகவும்.

6. கள்ளிகுளம், காசி, எ. தேவசகாய நாடாரும், வடக்கன்குளம், சத்தியநாதன் பிரான்சிஸ்கு நாடார் சடாநாயகராகவும்.

7. கள்ளிகுளம், பி. ம. ஞானசைமரியா நாடாரும், வடக்கன்குளம், சூ. தை. சிலுவை நாடாரும், பிரசாரகர்களாகவும், அங்கத்தவரின் ஏகோபித்த அனுமதிப்படி தீர்மானிக்கப் படலாயிற்று. என்று காரியதரிசி எழுதுகிறார்.

⁂

(நமது சொந்த நிருபரிடமிருந்து.)

தேவவரம் ராஜா

ராஜா தேவவரம் நாடாரவர்கள் மதுரையம்பதியில் நமது மஹாஜன கவுன்ஸில் மீட்டிங்குக்கு விஜயஞ்செய்தபின் நம்மவர்கள் வசிக்கும் மற்றும் சில ஊர்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு கடந்த வாரம் இவண் திரும்பினர். தாம் எதிர்பார்த்திருந்தவண்ணம் ஒன்றும் கைகூடிவரமார்க்கமில்லை யென்றும், தமது கோறிக்கைகள் நிறைவேறுவது கஷ்டமென்றும், நம்குலத்தவர் ஏகமனதுடன் முன்வராவிடில், சிலோனில் இதாமரபினர் தயாராக விருப்பதாகவும், அவர்களுடன் சேர்ந்து வேலையை ஆரம்பிக்கப் போகிறதாகவும், மனக்கிலேசமுள்ள வார்த்தைகளைப் புகன்றதுடன் நமது கவுன்விலைப்பற்றியும், நாடார் மகாஜன சங்கத்தின் நிர்வகிப்பைப் பற்றியுமுள்ள தமது சொந்த அபிப்பிராயங்களை மற்றோர்சமயம் நமது மித்திரன் வாயிலாய் வெளியிடுவதாகவும் வாக்களித்தனர். தேவவர ராஜனின் சிறந்த புத்தியையும், ஆழ்ந்த அறிவினையும், வளர்ந்த அபிமானத்தையும், தீர்ந்த அனுபோகத்தையும் நாமனுபவியாதிருப்பது நமது சங்கத்தாரின் ஊக்கத்தை வரையறுக்கும். இந்திய நாடார்களே! “காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்” என்பதை நீவிர் கடைப்பிடிக்க கடமைப்பட்டுள்ளீர்!

இலங்கை அத்தியக்ஷாதீனம்

ஆங்கிலேய திருச்சபையின் பிரதம குருமஹாகனம் கோப்பில்ஸ்றன் அத்தியக்ஷரவர்கள்விருத்தாப்பியானது பற்றி தமது பதவியிலிருந்து விலகி இவ்வருடத்தில் தன்சுயதேசத்திற்குப் புறப்படுகிறார்கள். கனம் அத்தியக்ஷரவர்களுடைய ஸ்தானத்திற்குறியவர்கள்இவ்விடத்திலேயே தெரிந்துகொள்ளப்படுவோர்களாதலால், கண்டி கலாசாலையிற் பேர் பெற்றிலங்கும் ரெவ. எஜிபிரேசர் ஐயரவர்கள் இப்பதவிக்கு அபேக்ஷகராக நிற்பவர்களிலொருவரென யூகிக்கப்படுகின்றது. இதே பெயருடன் பங்காளத்தில் கவர்னராயிருந்தவர் இவருடைய உடன் சகோதரரே. இவர் இந்திய கிராமங்களின் கல்வி அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்ட கமிஷனில் அக்கிராசனராயிருந்து ஊழியஞ் செய்தவர். பஞ்சாப்படுகொலையை பக்ஷபாதமின்றி பத்திரிகைகளில் கண்டனம் செய்த சொற்ப ஆங்கிலேய குருக்களில் இவர் முதன்மையானவர். இந்தியர் பூரண சுயேச்சையடையவிரும்பும் புண்யசீலர். இவர் இவ்வத்தியக்ஷாதீனத்திலமரநாம்இறைவனை இறைஞ்சுவோமாக.

நீர்க் கொழும்பு

4-1-23 ல் நாடார்குல மித்திரன் பத்திராதிபர் கனம் சூ. ஆ. முத்து நாடார் அவர்கள் நமது ஆனரெரி மானேஜர் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளையவர்களுடன் இவடம் விஜயஞ் செய்தார்கள். உறவின் முறை நாடார்களால் வரவேற்கப் பெற்ற இரவு ஓர் மீட்டிங் நடைபெற்றது உறவின்முறை நாடார்களால் மித்திரன் க்ஷேமநிதி எழுதப் பெற்ற பின்னர் இருவருக்கும் மாலை சூட்டி தாம்பூலம் வழங்கியதும் சபை இனிது கலைந்தது காலையில் கொழும்புக்கு பிரயாணமானார்கள்.

முரட்டுவோ.

அருப்புக்கோட்டை நாடார்குல மித்திரன் அதிபர் கனம் சூ. ஆ. முத்துநாடார் அவர்கள், கௌரவ மானேஜர் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளையவர்களுடன் 5-1-23 ல் இவடம் விஜயஞ் செய்து உறவின் முறை நாடார்களைக் கண்டுபேசி சுது வெல்லை 44-ம் நிர் வீட்டில் இரவு ஓர் மீட்டிங் நடைபெற்றது. சுது வெல்லை 44 நிர் 43-நிர் இடமே 183-நிர் 184-நிர் கட்டடங்களிலுள்ள உறவின்முறை நாடார்கள் க்ஷேமநிதி எழுதியும் சந்தாதாரராகவும் சேர்ந்தார்கள் தாம்பூலம் வழங்கப் பெற்று சபை கலைந்தது காலையில் கொழும்புக்கு பிரயாணமானார்கள்.

பாணந்துறை,

மித்திரன் அதிபர் கனம் சூ. ஆ. முத்து நாடார் அவர்கள் கௌரவ மானேஜர் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளையவர்களுடன் 8-1-23 ல் இவடம் விஜயஞ் செய்து, ஸ்ரீமான் வ. கி. சி. சுப்பையா நாடார் அவர்களால்உபசரிக்கப்பெற்று, க்ஷேமநிதிசந்தா வசூலித்துக்கொண்டு 9-1-23 ல்கொழும்புக்கு பிரயாணமானார்கள்.

மதிப்புரை.

“ சரஸ்வதி ” என்ற ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம். இது சென்னையில் சுமார் பதினைந்து வருஷங்களாக மிகசிறப்புடன் நடந்தேறிவரும் சரஸ்வதி சங்கத்திலிருந்து வெளிவருகிறது.

இகபரசாதனங்கள் பெண்களின் முன்னேற்றம், பொதுஜன சேவை முதலிய நல்ல விஷயங்களையே முக்கிய நோக்கமாய் கொண்ட சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. வேண்டுவோர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் வருடத்திற்கு சந்தா ரூபாய்மூன்றுதான். சரஸ்வதி சங்கம் 28 பிடாரியார் கோவில் வீதி சென்னை.

தக்ஷணநேசன் என்ற மாதாந்த தமிழ்ப்பத்திரிகை வரப் பெற்றோம் இஃது தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும், தமிழ் நாட்டின் நன்மையைக் கருதியும், ஆடவமாது சிரோன் மணிகளால் எழுதப்படும் அருமையான வியாசங்களைத் தனது அங்கத்தில் கொண்டு வெளிவருகிறது. வருடச்சந்தா ரூ 2—0—0 வேண்டுவோர் இதனடியில் கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

பத்திராதிபர்— ‘தக்ஷிணநேசன்’
ஸ்ரீரங்கம், திருச்சி,

அகஸ்தியன் என்ற நாமம் பூண்டஒரு இனிய மாதாந்த தமிழ்ப் பத்திரிகை நமது பார்வைக்குக்கிடைக்கப்பெற்றோம். இது திருவிதாங்கூர் சதானந்தபுரம் கொட்டாரக் கரையிலிருந்து வெளிவருகிறது. இந்து மத ஏற்றத்தையே பிரதானமாகக் கொண்டுழைத்து வருகிறதாயினும், வைத்திய, முறைகளையும், கைத்தொழில் குறிப்புகளையும், ஞானார்த்தமானதும் ஆத்மார்த்தமானதுமான விஷயங்களையும் தனது அகத்தில்சூடி வெளிகிளம்புகிறது. இது நல்லபிவிருத்தியடைய வேண்டுகிறோம். வருஷ சந்தா ரூ 3-0-0.

கல்பதரு என்ற மாதாந்த தமிழ்ப் பத்திரிகை நமதுபார்வைக்குக்கிடைக்கப் பெற்றோம். இது, ராஜீய. தேசிய, வியாபார, விபசாய, கல்வி, கைத்தொழில் முதலிய பலவிஷய வியாசங்களைத் தாங்கி வெளிவருகிறது. வருட சந்தா ரூ 3—0—0 விலாசம்—மானேஜர், “கல்பதரு” ஆபீஸ்,64 இராமசாமி தெரு ஜார்ஜ் டவன், சென்னை.

தேசசேவகன் என்னும் மகுடம் புனைந்த வாராந்த தமிழ்ப் பத்திரிகை வரப்பெற்றோம். இஃது ஸ்ரீமான் சின்னையா இரத்தின சாமி நாயுடு அவர்களை பத்திராசிரியாராகக் கொண்டு,புதுச்சேரியிலிருந்து வெளி வருகிறது. இது இந்தியாவின் விடுதலையைநாடி உழைக்கக்கூடிய பத்திரிகை.வருடச்சந்தா ரூ 6—0—0 இஃது தான் கொண்ட நன்னோக்கத்தின்படி உழைந்து நற்பெயரடைய எல்லாம்வல்ல ஈசனடி தொழுது நிற்கின்றோம்.

பழமொழித் திரட்டு.

கையில் ஒரு காசுமில்லை கடன் கொடுப்பார் யாருமில்லை

என்பது போல உலகத்தையே நான்கு வருடம் (மகாயுத்தத்தின் போது) கிடுகிடு!! வென நடுங்கச்செய்த ஜெர்மெனியானது தற்சமயம் இறகு இழந்த பக்ஷி போலிருக்கிறது. இந்த லக்ஷணத்தில் நேசதேசத்தார் நஷ்ட ஈடு என்ற ஒரு பெரிய பாரத்தைத்தூக்கி அதன் மேலே வைத்து, இனி ஜெர்மனி எக்காலத்திலும் தலைதூக்கமுடியாத நிலைமையில் வைத்துவிட்டார்கள். ஜெர்மனியானது, கையில் காசில்லாமலும் தனக்கு கடன் கொடுப்பார் யாருமில்லாமலுமிருந்து தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நமது காருண்ய பிரிட்டிஷ்க் கவர்ன்மெண்டார் நஷ்டஈடு விஷயத்தில் சிறிது தயவு காட்டுகிறார்கள். ஆனால் பிரான்ஸோஜெர்மனி மறுபடியும் நல்ல நிலைமைக்குவந்தால் தனக்கு அபாயமிருக்கிறதென்ற தன்னலங்கொண்டு ஜெர்மனியை நசுக்கிவிடவேண்டு மென்று நினைக்கிறது. ஆனால் தெய்வத்திருவுள்ளமெப்படியிருக்கிறதோ! ஜெர்மனி நசித்துபோகுமானால் ஐரோப்பாவும் நசித்து போகுமென்பதை நாம் குறிப்பிடவேண்டிய தில்லை.

வலியவந்த சீதேவியை காலால் உதைத்து தள்ளியது

போலிருக்கிறது. நம் மகாஜனங்களின் நிலைமை.நமதுமகாஜனக்கான்பரன்ஸ்முதல்கிளைக் கான்பரன்ஸ் வரைஒவ்வொன்றிலும்கைத்தொழிலைப்பற்றியும்நம்குலமாணவர்களை அன்னியநாட்டிற்கு அனுப்பி, தொழில் கல்விகற்றுவரச்செய்யவேண்டு மென்பதை பற்றியும், தொழில் சாலைகள் ஏற்படுத்தவேண்டு மென்பதை பற்றியும். தீர்மானிக்கப் படாமலிருக்க வில்லை என்பதை நாம் அறிந்ததே.

இப்படிப்பட்ட நல்லசந்தர்ப்பத்தில்தும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்தது போல, கனம் ராஜா தேவவரம் நாடாரவர்கள் கொழும்பிலிருந்து இந்தியாவிற்கு விஜயஞ் செய்து, நமது மகாஜனசங்கக் கவுன்ஸில்மீட்டிங்குக்குஆஜராகிதனது நன்னோக்கத்தை பூர்த்தி செய்து வைக்க வேண்டிக் கொண்டதோடு, நம்மவர்கள் ஏராளமாய் வசிக்கும் பிரதேசங்களுக்கு விஜயஞ்செய்துதன துநன்னோக்கத்தையும் பரவச் செய்தார்கள். ஆனால்அவர்களுக்கு இந்தியச் சுற்றுப்பிரயாணத்தில் திருப்தியில்லாமலிருப்பதுபோலத் தெரிகிறது ஏனெனில்தனது இனத்தவர்களின்உதவியைகொண்டுகைத்தொழில்சாலைஏற்படுத்துவதென்றால்அசாத்தியமான காரியமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். தான் அன்னிய நாடுகளுக்குச் சென்று 'அதிடாலியத்திலிருந்து கஷ்டப்பட்டுகற்றுவந்த கைத்தொழில்க் கல்வியை தன்குலமாணவர்களுக்கே கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நோக்கம் பலிதப்படாமல் போகுமோ வென்று அஞ்சி, பெரிதும் விசனித்து எழுதுகிறார்கள். இப்படிப்பட்ட கிடைத்தற்கரிய நற்சந்தர்ப்பத்தை நாம் இழக்க நேரிடுமானல் நாடார்கள் வார்த்தையளவிலேயே நிற்கக் கூடியவர்கள்தான் என்று உலகம் எண்ணுவதற்கு ஏதுவாகும். ஆகையால் நாடார்கள் தங்களாலியன்றளவு கனம் தேவவரம் நாடாரவர்களால் ஸ்தாபிக்கப்படப்போகும் தொழில் சாலைக்கு பங்கு எடுத்து உதவி செய்வதோடு நாடார் மகாஜன சங்கத்தார் உடனே கவுன்விலில் தீர்மானத்தின்படி சர்குலர்களை வெளியிட்டு பிரசாரகர்களை அனுப்பி பிரசாரஞ்செய்வார்கள் என்று நாம் எதிர் பார்க்கிறோம். நாடார் மகாஜன சங்கத்தார் இதுவரையும் இது விஷயத்திற்கு யாதொரு பிரயத்தனமும் செய்யாமலிருப்பது விசனிக்கத்தக்கதே.

அக்கினிக்காவடியும், அறிவிலிகளின் அக்கிரமச் செய்கையும்.

ஐயன்மீர் !

குமாரக் கோவில் என்பது தென் திருவிதாங்கூரில் கல்குளம் தாலுகாவில் வேள்ளி மலைச்சாரலிலுள்ள ஒரு சுப்பிரமண்யர் ஆலயம். இதுவும் தற்காலத்து சமத்துவமில்லாத ஒரு இந்து ஆலயமே. சென்ற வைகாசி விசாகத்தன்று திருச்செந்தூர் முருகன் சன்னிதிக்கு மச்சக் காவடி கட்டி அபிஷேகம் நிறைவேற்றின தென் திருவிதாங்கூர் வாசியான நாடார் பக்தரொருவர் நாளது கார்த்திகை மாதத்து சுக்கிரவாரத்தன்று ஷை குமாரக் கோவிலுக்கு அக்கினிக்காவடி யொன்று கட்டி நிறைவேற்றுவதாக சில நாட்களுக்கு முன்னரே கூறியுள்ளார். இதையறிந்த ஜாதித்வேஷிகளாகிய அறிவிலிகள் தங்கள் தங்கள் மனதிற்கிசைந்தவாறு போலிச் சுவடிகள் கட்ட ஏற்பட்டு விட்டனர். அஃதெவ்வாறெனில் "ஒரு நாடார் அக்கினிக் காவடி கட்டுகிறாரென்றும், யானைச் சங்கிலியை தீயில் பழுக்க வைத்து அவர்கழுத்தி லணியப் போகிறாரென்றும், ஷை ஆலயத்தில் பூட்டப்பட்டுள்ள கதவுகள் தானே திறக்கப்பட்டு தம்ஜாதியார்களுக்கு கோவில் பிரவேசம் வாங்கிக்கொடுக்கப் போகிறாரா பென்றும் பலவிதமாக வர்ணித்து சமதரிசி முதலிய பத்திரிகைகளிலும் பரப்பிவிட்டார்கள்.

இதை யறிந்த ஜனங்கள் உண்மையை அறிய அவாவுடையவர்களாய் ஷை குமாரக் கோவில் வந்து கூடினர். வந்து கூடின ஜனங்களின் கூட்டத்திற்கோரளவேயில்லை இன்று பிரத்தியேகஇடத்திலேயே-வேள்வி நாடார்களாலேயே வளர்க்கப்பட்டது. பகல் 12-மணிக்கே ஜனங்கள் எல்லோரும் தங்கள் திருஷ்டியை வேள்வியிலேயே பதித்தவண்ணமாயிருந்தார்கள்.

காவடி கோவிலின் சந்நிதிக்கு சமீபம் வந்து விட்டது என்ற சப்தம் கேட்டவுடனே, பொறாமையும் ஜாதித்வேஷமும் ஒருங்கே அமையப்பெற்ற அற்பர்கள் அநேகர் திரண்டு அகாரணமாய் காவடியைத் தடுத்து கூடிவந்த சிலரையும் அடித்து ஓட்டிவிட்டனர். இவ்வுண்மையையறியாத ஜனங்களிடத்தில் வேள்வியிலிறங்கப் பயப்பட்டு காவடி திரும்பி போய் விட்டது என்று பொய்யுரைத்துக் கொண்டு நாடார்களை விடாதே விடாதே என்று கூக்குரலிட்டு கொக்கரித்து ஆரவாரித்தனர். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்று பொறுமையுடனிருந்த நாடார்களி லநேகரை பலவிதத்திலும் உபத்திரவித்து அநேக கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாக்கிவிட்டனர். அந்தோ இஃது எம்பெருமானின் திருவிளையாட்டோ இவ்விசேடத்தை யாதொரு குழப்பமுமின்றி நிறைவேற்றிவைக்கவேண்டுமென்றுகாருண்யகவர்ன்மெண்டார் செய்த உபாயங்களெல்லாம் எங்கு சென்றனவோ! போலீஸ்சிப்பாய், புத்தன்பட்டாளம், போலீஸ்இன்ஸ்பெக்டர், போலீஸ் சூப்ரன்டென்ட், டிவிஷன்பேஷ்கார் முதலிய கவர்ன்மெண்டதிகாரிகளின் அடக்குமுறை எல்லாம் எங்கொளித்தனவோ யாமறியோம் ! குடிகளுக்கு எப்போதும் நன்மையையே அளித்தும் அளிக்கவும் விருப்பம் கொண்டிருக்கும் காருண்ய வள்ளலாகிய பொன்னுதம்புரானின் உப்பிட்ட சோற்றை மறந்து, உயிர்வாழும போலி உத்தியோகஸ்தர்களுக்கு எக்கெதி கிடைக்குமோ ? ஈசனறிவார். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பதை யறிந்து இவ்வதிகாரிகள் தங்கள் கடமையை சரிவர நடத்தியிருப்பார்களேயானால், நாடார்கள் இவ்வளவு அலங்கோலத்திற்கும், அவஸ்தைகளுக்கும் ஆளாகமாட்டார்களென்பது திண்ணம்.

S. K. பெருமாள்.

தக்ஷிண நாடார்கள் 4-வது மகாநாடு ஏறல்.

தாம்பிரவருணி யெனும் புண்ணிய நதிதீரத்திலே ஏறல் மாநகரெனும் திவ்ய க்ஷேத்திரத்தில் திருக்கோவிற் கொண்டெழுந்து திருவிளையாடற் புரிந்துவரும் ஸ்ரீமத் சேர்மன் அருணாசலஸ்வாமிகள் ஆலயத்தில் வருடமிருமுறையாக ஆடி, தைமாத உற்சவகாலங்களில் யாதொரு பொருட்செலவுமின்றி ஷை மகா நாடு இதுவரை மூன்று முறை வெகு குதூகலத்துடன் கூடி தென்னாட்டிற் கோர் மஹிமையாய் விளங்கிற்றென்பது யாவருமறிந்ததே. அப்படியிருக்க நாளது தைமீ 4உ (17-1-23) வரப்போகிற தைஅமாவாசை உற்சவம் சமீபித்தும்ஷை 4-வது கான்பரன்ஸைப்பற்றிய தகவல்களொன்றும் இதுகாறும் மித்திரன் வாயிலாயறிவிக்கப்படாதது பெருவியப்பாயிருக்கிறது. சென்ற ஆடி அமாவாசை உற்சவ தினத்தன்று பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் வழக்கம்போல் மகாநாடு கூடுகிற மணல் மேட்டில் இரவு சுமார் 12 மணிவரை காத்திருந்தும் மகா நாடு நடைபெறாமையால் ஏமாற்றமடைந்ததாகவும், பின்னர் மகாநாடு மறுநாள் சிறப்புடன் நடைபெற்றதாகவும் எமக்கு தகவல் கிடைத்தது. ஆனால் இம்முறை அவ்வித ஏமாற்றத்திற்கிடமின்றி உற்சவத் தினத்தன்று மாலை 6 மணிக்கே குறிப்பிட்ட இடத்தில் மகாநாட்டைத் தவறாமல் ஆரம்பித்துச் சிறப்புடன் நடத்திவைப்பதில் வழக்கம்போல் கோவிலதிகாரிகளும் சிறுத்தொண்ட நல்லூர் கிராமத்து நாடார்களும், ஏறல் நண்பர் ஸ்ரீ வீ. பொன்னுசாமிநாடாரவர்களும் தகுந்த ஏற்பாடு செய்வார்களெனப் பூர்ணமாய் நம்புகிறோம்.

பணச் செலவில்லாத இம் மகாநாட்டைச் சிறப்புடன் நடத்திவைக்க முடியாவிட்டால் நாம் குல நலங்கருதி வேறெக் காரியத்தைத் தான் சாதித்துவிடுவோம்?

சிற்க, சென்ற மூன்று கான்பரன்ஸ்களிலும் தமது சிரேசிரத்தையும் பணச் செலவையுங் கருதாமல் விஜயம் செய்து சிறப்பித்த பேரபிமானிகளான கனவான்களும், பத்திராதிபர்களும், மஹாஜன சங்கப் பிரசாரகர்களும் இம்முறையும் விஜயம் செய்து இம் மகா நாட்டை ஊர்ஜிதப் படுத்தத் தவறமாட்டார்களென்றே உறுதியாய் நம்புகிறோம்.

ஷை மகா நாட்டிற்கு விஜயம் செய்யக் கூடிய கனவான்கள் தயை கூர்ந்து தமது பெயரை எமது நண்பர் ஸ்ரீ எ. இராஜநாயக நாடார் மாவீடுபண்ணை, தென்திருப்பேரை போஸ்ட் என்ற விலாசத்திற்கு கார்டு மூலம் அறிவித்துவிட்டால் நோட்டீஸில்அவர்கள் பெயரையும் சேர்த்து அச்சிட வசதியாகும். உபந்நியாசகர்களும் மகாநாட்டுக்கு விஜயம் செய்வோரும் தம் சொந்த ஹோதாவில் வருவார்களாயினும் வழக்கம் போல் உள்ளூர்பிரமுகர்களும் கோவிலதிகாரிகளும் ஜாகை வசதி செய்து கொடுக்க வேண்டும். சுபம்.

வேதவ்யாசன்.

செய்தித் திரட்டு.

கதரின் வெற்றி நாடகம் அபராதங் கொடுத்தது.

ஸ்ரீமான் ரெங்கராஜு அவர்கள் எழுதிய "ராஜாம்பாள்" நாடகத்தின் பெரும்பாகத்தை திருட்டி "கதரின் வெற்றி" என்ற பெயருடன் நாடகம் நடத்திய, தெ. கிருஷ்ணசாமி பாவலர், பதிப்புரிமை பாத்தியதைக்காக, எழும்பூர் போலீஸ் கோர்ட் மாஜிஸ்டிரேட் அவர்களால் 3-1-23-ல் 250 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார்.

திருச்செந்தூர் ரெயில்வே.

திருநெல்வேலிஜில்லா திருச்செந்தூர்ரெயில் வேலை வெகு துரிதமாய் நடக்கிறது. கச்சினாவிளைவரை கட்டை பரப்பி, தண்டவாளம் பதித்து ரயில்வண்டி வந்துவிட்டது. நாலுமாவடி வாய்க்காலில் கொர்டர் வேலை நடக்கிறது. தினசரி முக்கால்மைல் தூரம் போகிறது. இந்த வாரத்துக்குள் குரும்பூர்ஸ்டேஷனுக்குப் போய்விடும். பாக்கி வேலைகளும் துரிதமாய்முடிந்து மாசித்திருநாளைக்கு சென்னைக் கவர்னர் இந்த லயனைத் திறந்து வைப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்திய நேஷனல் காங்கரஸ்.

37-வது தேசீய மகாநாடு, 26-12-22-ல் கயா என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீமான் பாபு சித்தரஞ்சனதாஸ் அவர்கள் தலைமையின் கீழ் கூடியிற்று. ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ் செய்தார்கள். எல்லாம் சுதேசிய மயமாயிருந்ததாம். காங்கரஸ் கூடுமிடத்திற்கு சுயராஜ்ய புரியென்ற பெயரிட்டிருக்கிறார்கள் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேத முண்டாகியிருக்கிறது. கயாவில் காங்கரஸ் கூடுவதற்கு முன்னே, பிளவு ஏற்படுமென்று எதிர்பார்க்கப் பட்டதுதான். காங்கரஸின் மைனாரட்டி கக்ஷியார் (சிறுபான்மையோர்) தங்களுடைய சிபார்சையும், அபிப்பிராயத்தையும், மெஜாரட்டிக் கக்ஷியார் (பெரும்பான்மையோர்) அங்கீகரிக்காததினால், காங்கரஸ்க்குள்ளே பிரிந்து ஒரு தனிக்கக்ஷி ஏற்படுத்திக் கொள்ளப் போவதாக அறிவிக்கிறார்கள். பிளவுக்கு முக்கிய காரணம் ஒத்துழையாமைக் காரர்கள் சட்டசபைக்குள் போவதா? கூடாதா? என்பதேயாம். ஆனால் மைனாரட்டிகக்ஷியார் சட்டசபைக்குப்போகவேண்டுமென்று வாதிக்கிறார்கள்.

பிராமண ரல்லாதார் 6-வது மகாநாடு சென்னை.

26-12-22-ல் சென்னை விக்டோரியா ஹாலில், இந்திய சட்டசபை மெம்பர் கனம் எ. பி. லத்தே, எட், ஏ, எல். எல். பி., எம். எல். ஏ. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. சுமார் 350 பிரதிநிதிகளும், விசிட்டர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். பிராமண ரல்லாதவர்களின் நோக்கத்தையும், அவர்களுடைய தன்மையும், நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பையும் அக்கிராசனர் தன் பிரசங்கத்தில் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.

எல்லா இந்திய மிதவாதிகள் மகாநாடு.

நாகபுரியில் 26-12-22-ல் ரைட் ஆனரபில் ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடியிருக்கிறது. அக்கிராசனர் தன்பிரசங்கத்தில், தற்கால ராஜீய நிலைமை திருப்திகரமாயில்லை என்றும், இராஜாங்க விஷயமாய் குறிப்பிட்டு பேசும் போது மாண்டேகு சீர்திருத்தப்படி 1920௵த்தில் இந்தியாவிற்கு கொடுக்கப்பட்ட விசேஷ உரிமையானது, பயன்படக் கூடியதாக விருக்கவில்லை என்ற நோக்கத்தோடு பேசுவதுபோல் காணப்படுகிறது.

இந்தியக் கிறிஸ்தவர்கள் மகாநாடு.

27-12-22-ல் லக்ஷ்மணபுரியில் இஸ்பெல்லா திபர் கல்லூரி, மண்டபத்தில் அகில இந்திய கிறிஸ்தவர்கள் மகாநாடு கூடிற்று. தேசத்தின் பல பாகங்களிலிருந்தும்நமது கிறிஸ்தவசகோதரர்கள்விஜயஞ்செய்திருந்தார்கள். அதில் டாக்டர் தத்தர் அக்கிராசனம் வகித்திருந்தார்கள். மகாத்மாகாந்தி அடிகள் தலைமையில்நடத்தப்பட்ட ஒத்துழையாமை திட்டத்தின் பல, அம்சங்களையும் ஆதரித்தும், ஒப்புக்கொண்டும், சிறந்தகிறிஸ்தவர் காந்தியே என்றும் குறிப்பிட்டு,தனது அக்கிராசனப் பிரசங்கத்தில் பேசினார். மகாத்மா காந்தியை உடனே சிறையிலிருந்து கவர்ன்மெண்டார் விடுவித்து விடவேண்டுமென்ற தீர்மானமும்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

Census Report & Notes.

ஜனசங்கையும் குறிப்புகளும்.

ஜாதிகள்.

ஜன சங்கையின்படி சென்னை மாகாணத்தில் 370 ஜாதியார்கள் இருக்கிறார்கள். (அதாவது ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட ஜனத்தொகையையுடைய ஜாதியார்கள்) இது தவிர, சொற்ப ஜனத்தொகையையுடைய ஜாதியார்களின் ஜனசங்கையை "மற்ற இதரஜாதியார்கள்" என்ற கலத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் சென்னைமாகாணத்தில் சுமார் ஓராயிரத்திச் சொச்சம் ஜாதிகள் இருப்பார்கள் போலத்தெரிகிறது. இதுவுமல்லாமல் ஒவ்வொருஜாதிக்குள்ளும் உட்பிரிவுகள் பல இருக்கின்றன. இந்தப் பாகுபாடுகளெல்லாம் இந்து மதத்தில்தானிருக்கின்றனவேயன்றி வேறு மதத்தில் காணோம்.

* * *

பிராமணர்கள் சென்னை மாகாணத்தில் (கன்னடர், தெலுங்கு, தமிழ் முதலிய எல்லா வகுப்பு பிராமணர்களின்) மொத்த ஜனத்தொகை 1463132. அவர்களில ஆண்கள் 730979. பெண்கள் 732153.

* * *

வெள்ளாளர்கள்.

சென்னை மாகாணத்தில் வெள்ளாளர்களின் மொத்த ஜனத்தொகை 2653775 ஆண்கள் 1311309. பெண்கள் 1342466.

* * *

ஆதித்திராவிடர்கள்.

நமது மாகாணத்திலுள்ள ஆதித்திராவிடர்களின் ஜனத்தொகை 50015. அவர்களில் ஆண்கள் 25560.

* * *

பள்ளர்கள் (குடும்பர்கள்.)

நமது மாகாணத்தில் பள்ளர்களின் ஜனத்தொகை 862685. ஆண்கள் 418332. பெண்கள் 444353.

* * *

பறையர்கள். (சாம்பான்கள்.)

நமது மாகாணத்தில் பறையர்களின் ஜனத்தொகை 2337038. ஆண்கள் 1143480. பெண்கள் 1193558.

* * *

சக்கிலியர்கள். (பகடைகள்.)

நமது மாகாணத்தில் சக்கிலியர்கள் ஜனத்தொகை 549707 ஆண்கள் 268582. பெண்கள் 281225.

* * *

அம்மட்டர்கள். (நாவிதர்கள்.)

மொத்த ஜனத்தொகை 227224. ஆண்கள் 111619. பெண்கள் 115605.

* * *

வண்ணார்கள். (ஏகாலியர்கள்.)

மொத்த ஜனத்தொகை 250557. ஆண்கள் 126403. பெண்கள் 124154.

* * *

குறவர்கள்.

மொத்தம் ஜனத்தொகை 132365. ஆண்கள் 68295. பெண்கள் 64070.

* * *

ஸௌராஷ்ட பிராமணர்கள்.

மொத்த ஜனத்தொகை 90821. ஆண்கள் 46391. பெண்கள் 44430.

* * *

கள்ளர்கள்.

நமது மாகாணத்தில் கள்ளர்கள் மொத்தம் 533972. ஆண்கள் 259628. பெண்கள் 274544.

* * *

தேவாங்கர்கள்.

மொத்த ஜனத்தொகை 288836. ஆண்கள் 144094. பெண்கள் 144742.

* * *

இந்திய கிறிஸ்தவர்கள்.

மொத்த ஜனத்தொகை 1346351. ஆண்கள் 666089. பெண்கள் 680272

* * *

மறவர்கள்.

மொத்த ஜனத்தொகை 450013. ஆண்கள் 224794. பெண்கள் 225219.

* * *

அகமுடையர்கள்.

மொத்த ஜனத்தொகை 368639. ஆண்கள் 179804. பெண்கள் 186835.

* * *

வாணியர்கள்.

மொத்த ஜனத்தொகை 200507. ஆண்கள் 100429. பெண்கள் 100078

வித்தியாதானமே சிறந்தது.

ஐயன்மீர்,

தண்கடலை ஆடையாகத்தரித்த இப்புவிதன்னில் பூர்வம் நானாதேசங்களுக்கும் நல்வழியைக் காட்டிய இப்பாரத தேவியின் வயிற்றில் உற்பவித்து கல்வி, கேள்விகளில்சிறந்து பாரதமாதாவின் மைந்தர்களாலும், மற்றும் ஏனைய தேசத்தவராலும் கொண்டாடப் பெற்று தமிழ்த்தாயை வளர்த்து நீதியுடன் செங்கோலோச்சிவந்த எனது வழுதிகுல மரபினர்காள்! சிறிது செவிசாய்மின் !!

நமது பாதகண்டம் எத்தகைய நிலையிலிருந்து தாழ்வு நிலையை அடைந்ததோ அக்தே போன்று நாமும் தாழ்வு நிலையை எய்தி யுள்ளோம் என்று சரித்திரவாயிலாய் தெற்றென "மலைமேல் ஏற்றிய விளக்கைப்போன்று" அறிகிறோம். பாரததேவியின் புத்திரர் பலர் தனது மாதாவபீஷ்ட மடைய் மார்க்கம் தேடும் காலத்திலே உறக்கக் கொட்டாவிவிட்டு கரங்களை முறுக்கிக் கொண்டு மூலையில் உட்கார்ந்து முரண்பாடாகப்பேசிக் காலத்தை வீணேபோக்கின பலரும் வர, வர பாரததேவி க்ஷேமமடைந்து வருகின்றுள் என்றநவீன உணர்ச்சி வரப்பெற்று ஒவ்வொரு வகுப்பாரும் தாம், தாம் க்ஷேமமடையும் மார்க்கத்தின் வழியைத் தேட ஆரம்பித்தனர் என்பது சுமார் 40 வருஷ சரித்திரமாக நிற்கின்றது. இக்காலத்திலுள்ளே சுமார் 10 ஆண்டு கட்கு முன்னர் நமது பாண்டியகுலமும் மீண்டும் தான் இழந்த கல்வி, செல்வம், ஒழுக்கம், நாகரீகம் முதலிய சற்சின்னங்களைப் பெற்று யாண்டும் க்ஷேமமடைய நம்தலைவர்கள் ஆலோசிக்கலானார்கள். இடம் பொருள் ஏவல் என்பதை கவனித்து சங்கத்தையும் திறந்தார்கள். சங்கமானது தனது சங்குநாதத்தை ஒலி முழக்கவே பத்திரிகைகள் நித்தமும் உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தை கந்தித்திரியவே நமதுகுலத்தவர்கள் மத்தியிலும் புதிய உணர்ச்சி வளரப்பெற்று வருகின்றது என்பதுவும் காணக்கிடக்கின்றது.

மேலும் மகமை என்ற புதுமுறையை ஸ்தாபித்தவர்கள் பூர்வநம்மவர்களே. மகமையின் மகிமையை இப்போது நாம் கண்கூடாகக்காண்கின்றோம். மகமைஏற்பட்ட அக்காலத்தில் அதற்குஇடையூறு ஏற்படாதிருந்திருக்காது என்பதுகுறிப்பிடத்தக்கது. ஏனென்றால் விருதுமாநகரில் க்ஷத்திரிய வித்தியாசாலையில் 10 வது வகுப்புவரையும் எக்குலத்தவர்களும், யாதொரு சம்பளமும் இல்லாமல் கல்விப் பயிற்சியடைவதின் காரணம்மகமையே என்பதை நம்மவர்கள் அறிந்திருந்தும் இக்காலத்தில் மகமை என்றால் அலக்ஷியமாகநினைப்பதும்அதற்கு இடையூறுவிளைவிப்பதும் உளவாதலால் என்க.

நமது நலத்திற்காக மட்டும் சங்கம் திறந்தோம் என்று எண்ணுவது என்னவியப்பு, நமது வழிச்சந்ததியாரின் க்ஷேமத்தை பொருட்டன்றோ சங்கம் திறந்தோம். சுமார் 10 வருஷகாலங்களுக்குள் நமது சங்கமானது செய்து வந்திருக்கும் அரிய பெரிய வேலைகள் அதன் பருவத்திற்கு மிஞ்சியதே என்றும் நாம் கவனித்தல் வேண்டும். ஒவ்வொரு குக்கிராமங்களிலும் நவீன உணர்ச்சி உண்டாயிது சங்கத்தாலன்றோ! நம்மவர்கள் இன்னும் மேன்மேலும் சுபீட்சமடைவார்கள் என்பது நாளடைவில்என்பது உண்மையன்றோ.

நம்மவர்கள் மத்தியில் மகமையை தோன்றச் செய்தவர்கள் பெயர் பெரும் புகழடைவது போலும், சங்கத்தின் பயனை நமதுசந்ததியார்கள் போற்றுவார்களன்றோ! இவ்வுண்மையை அறிந்தும், அறியாததுபோல் மறைத்துக் கூறுவதும் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதும்நீதியா, தர்மமா ? சான்றோர்குலத்துதித்த ஆன்றோர்காள்! நமது அதியாகிய வழிவழித் தோன்றல்கள் பெரும் புகழ் எய்துமாறு செய்யவேண்டியது நமது கடமையன்றோ!

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்று நம் முதற்பாவலர் கூறிய வண்ணம் "அரிதரிது மானிடராதலரிது" என்று தாயுமானவர் கூறிய நீதியில் மறைந்திருக்கும் மற்றப்பிராணிகளில், நாம் உலகின் அஞ்ஞானபந்தத்தால் கட்டுண்டு அதன் பயனாக பிறந்துழலாவண்ணம் உலகில் நடைபெறும் நானாவித தோற்றங்களிலுள்ள உண்மைகளை சரித்திரத்திற்கும், காலத்திற்கும், அனுபவத்திற்கும் ஒத்துக் கண்டறிந்து அதன்வழி செல்லவேண்டியது நமது கடமையன்றோ!

நீர், நமது சங்க நோக்கம் என்னவென்று உய்த்தாராய்ந்தால்,

"மேற்பிறந்தாராயினுங் கல்லாதார்
கீழ்ப்பிறந்துங் கற்றாரனைத்திலர் பாடு",

என்ற நம் தெய்வப்புலவர் திருவாக்குக்கிணங்க அதாவது உயர்ந்த வகுப்பில் ஒருவன் தோன்றி யிருந்தாலும் கல்வி, கேள்விகளில் வல்லோனாயிராதுபோனால் தாழ்ந்த வகுப்பில் தோன்றிய ஓர்கலை கல்லோனுக்கும் சமமாக மாட்டான் என்ற நீதிக்கிணங்கவும்,

"நாற்பாற் குலத்தில் மேற்பாலொருவன் [ருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே"

என்று நம் மூதாதையாம் பாண்டியரும் புகன்றிருக்கின்ற நீதியைக் கவனித்தும் நாம் க்ஷத்திரிய வம்சத்தில் தோன்றியும் 64 கலைஞானங்களிலும் பாண்டித்யம் பெற்று பாடல் பெற்று. பலர் மெச்சவாழ்ந்துவந்த பாண்டிய வழித்தோன்றல்களாயிருந்தும் நம்மவர்கள் கல்வியை அடையாவிட்டால் தெய்வப் புலவரும். பாண்டியரும் இன்னும் மற்றமேதாவிகளும் கூறியவை நம்பால் நேர்ந்து விடுமோ என்றும்,

"வாழைக்குத்தான் ஈன்றகாய் கூற்றம்" என்ற உண்மை உரைக்கிணங்க நமது பாண்டியன் புகன்றதே நமக்கு சாபமாய் வந்து விடுமோ என்றும் ஓயுற்று கல்வி என்ற கருந்தனத்தை விர்த்தி செய்ய சங்கம் முனைந்து நிற்கின்றது. ஒவ்வொரு குக்கிராமங்களிலும் உள்ள நமது உண்மைக் குலாபிமானிகளையும் நமது ஜனசமூக முன்னேற்றமே தன்னேற்றமாகக்கருதும் நம் தலைவர்களையும், சங்கம் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது.

சங்கத்தின் பயனாலும் பத்திரிகையின் ஓயாத முறைபாட்டினாலும் நமது குலத்தவர்கள் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும், வித்தியாசாலைகள் ஏற்பட்டு நடைபெறுவதையும், வித்தியாசாலைகள் ஸ்தாபிக்கும் வண்ணம் செய்யும் முயற்சிகளும் நம்குல பத்திரிகா ரத்தினங்களால் கண்டு களிப்படையும் இன்னுளில் என் அருமை மித்திர! நினது நிறைசெவிப்படும்படி தொனிக்கும் இக்காலம் ஒரு செய்தி சொல்லுகிறேன். விஷயத்தை சீக்கிரம் கொண்டு உழைத்துவா. மறுமுறை சந்திக்கிறேன் விஷயம் யாதெனில்:-

இராமநாதபுரம் ஜில்லாவில் மித்திரன் பிறப்பிடமாகிய திருநல்லூ ரென்னும் அருப்புக்கோட்டைக்கு கிழக்கே சுமார் காததூரத்தில் இலுப்பையூர் என்னும் கிராமம் ஒன்றுஉளது.

நமது குலத்தவர் முற்போக்கால் துவேஷம் அடைந்து சமயம் பார்த்து விஷமச் செயல்கள்புரியும் கூட்டத்தாரால் மேற்படியூரில் நம்மவர்கள் பலகாலும் சஞ்சலமடைந்தும் அதனின்றும் மீளும் பொருட்டு ஏராளமான பணவிரயம் செய்தும் குலாபிமானம் கைவிடாது ஓர் ஆரம்பக்கலாசாலை திறந்து காருண்ய கவர்ன்மெண்டார் ஆதரவும் பெற்று நாலாண்டும் முடிவெய்தி விட்டது. அவ்வித்தியாசாலையை நிலைநிறுத்தக் கருதி கட்டடம் ஒன்று கட்டி முடிக்க மேற்படியூர் உறவின் முறை நாடார்களும் வெகு சிறத்தை எடுப்பதாகவும் தெரிகிறது. "திரை கடலோடியும் திரவியந்தேடு" என்று நம்மூதாட்டி கூறியதற்கிணங்க இரங்கோன்மாநகர் அடைந்திருக்கும் இலுப்பையூர் நாடார்கள் அனைவரும் தங்கள் உறவின் முறையார் நோக்கத்திற்கிணங்க இவ்விடம் நிதிசேர்த்து வருகின்றனர்.

ஆகலான் இப்பெருங் கைங்கரியத்திற்கு உருவாக்கின சங்கத்திற்கும், நம்குல பத்திரிகைக்கும். உலகில் தோன்றி யிருக்கும் புதிய சத்திக்கும் தரும விஷயத்திற்கும் முன்வந்துழைக்கும்புண்ணியவான்களுக்கும்,

"ஒல்லும்வகையானறவினையோவா [தே
செல்லும் வாயெல்லாஞ் செயல்"

என்றபடி தனது மாசற்ற மனத்தினாலும், தனது வாக்கு சாதுர்யத்தினாலும் தனது உடம்பினாலும், ஒருவன் தருமம் செய்யக் கடமைப் பட்டவன் என்ற நீதியையோர்ந்து பொருளுதவிசெய்யும் கண்ணியவான்களுக்கும் மனம், மொழி மெய்யால் புத்தி செலுத்தி எல்லாரும் இப்பேர்க்கொற்ற சத்கருமங்களில் ஈடுபட இறைவனைவழுத்துவோமாக. சுபம்.

S. J. தாஸ்.

தியாகராஜன்

அல்லது

திறமையுள்ள ஓர் வாலிபன்.

(முன் தொடர்பு)

ஏழாம் பாகம்.

ஓர் பெரிய வனாந்திரத்தின் நடுவே பெரிய மலை யொன்றிருக்கிறது. இம்மலையைச் சுற்றி பல மரங்கள் ஓங்கிவளர்ந்திருக்கின்றன. அவைகள் அடர்ந்து தழைத்திருப்பதால் சூரிய கிரணம் முதலிய வெளிச்சம் கீழேவருவதில்லை. ஆனால் இப்பொழுதோ இரவு மணி பத்து இருக்கலாம். மரக்கிளைகளின் வழியாய் பார்த்தால் பூரணச் சந்திரன் நன்றாய்ப்பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். வானத்தில் மேக மென்பதே இல்லாதபடியால் சந்திரன் கிரணங்கள் வெகு தெளிவாய் இருக்கின்றன. சந்திரன் எவ்வளவு சாவகாசமாய்இருந்தபோதிலும் அம்மலையடியில் இருள் மூடிக்கொண்டுதானிருக்கிறது. தென்றற்காற்றும் மந்தகாசமாக வீசிக் கொண்டிருக்கிறது. சப்தமென்பதே கேட்கவில்லை.

இப்பேர்ப்பட்ட நிர்மானுஷ்யமான இடத்தில் ஓர் உருவம் அசைவதுபோலத் தெரிகிறது. சந்திரகிரணங்கள் அவ்விடத்தில் இல்லாததால் அது யாதாயிருக்குமென்பது விளங்கவில்லை. சற்று உற்று நோக்கியபோது அதுஒரு யௌவனமனித உருவமாகவே இருக்கிறது. அவன் முன்னும் பின்னுமாகப் பார்த்துக்கொண்டு கொஞ்சங் கூட சந்தடி செய்யாமல் பெருவிரல்களாலேயே நடந்துகொண்டுவருகிறான். இவன் நடக்கைகளைச் சற்றுகவனிக்கும்போது தாங்கும் எதிரியை கொலை செய்யச் செல்லுபவன் போலத் தெரிகிறது. இவன் கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து சென்று மலையடிவாரத்தையடைந்தான்.

இம்மலையில் உள்ள ஓர் பிளவில் தன் கையைக் கொடுத்து தன் முழு பலத்தோடும் இழுக்கவே ஓர் கதவுபோல் அது திறந்தது. உடனே அவ்வாலிபன் தன் சட்டைப்பையிலிருந்து ஓர் தங்கமயமான வஸ்துவை எடுத்தான். இது ஒரு திறவுகோலாக இருக்கிறது. இச்சாவியை தன்னால் திறக்கப்பட்ட ஓர் பொந்தில் உள்ள மனுஷ உருவத்தின் கண்களில் தாக்கவே அப்பெரிய மலையின் முன்னொரு பாகத்தில் அம்மலை இரண்டாகப் பிளவுற்றது. உடனே அவ்வாலிபன் தன்னுடைய சாவியைக் கையில் எடுத்துக்கொண்டு அம்மலைக் குகைக்குள் சென்றான். அக்குகைக்குள்ளும் ஓர் மனித உருவம் நின்றது அதனுடைய கண்களிலும் அச்சாவியைக்கொண்டு தாக்கவே மறுபடியும் அம்மலைக் குகை தானாகவே பூட்டிக்கொண்டது.

உடனே அவ்வாலிபன் மிகவும் சந்தோஷத்துடன் அக்குகைக் குள்ளே சென்றான். அந்த இருட்டுக் குகைக்குள் [illegible] வெகுதூரம் சென்றவுடனே ஓர் அழகிய அறை ஒன்று தென்பட்டது. உடனே அவ்வாலிபன் தன் இருகைகளாலும் கதவைத் தாக்கவே கதவு திடீரெனத் திறந்தது. உள்ளே அவ்வறையின் தோற்றமிக நேர்த்தியாகவே இருக்கிறது. நாலாபக்கங்களிலும் ஆசனங்கள் பல இடப்பட்டிருக்கின. அவைகளின் நடுவேஓர்பீடம் இருக்கிறது. இவ்வாலிபன் சற்றுதயங்கி நின்றுவிட்டு அப்பீடத்தின்மேல் தன்னுடைய தங்கச்சாவியை வைத்தவுடனே அதனுடைய மேல்பாகம் சற்றே விலகிற்று. உடனே அவ்வாலிபன் தன்கையை உள்ளே விட்டு ஓர் வாத்தைக் கையில் பிடித்துக்கொண்டு அதை வெளியே எடுத்தான். அவ்வாத்தைக் கீழேவிட்டதும் அது ஒரு முட்டையைக் கீழேபோட்டுவிட்டு மாயமாய் மறைந்தது. இம்முட்டையை தன்னுடைய காலடியில் வைத்து உடைத்துவிட்டு மலைக்குகையைவிட்டு வெளியே வந்துவிட்டவன் தினகரன் என்னுமோர் வாலிபன். இவன் அதிக சந்தோஷத்தோடு கைவிரைவாய் ஓர் பாதையைப் பின் பற்றிச் சென்றுகொண்டிருக்கிறான். (இன்னும் வரும்)

கல்லூரிமாணவன்.

சுற்றுப் பிரயாணம்.

நமது சுற்றுப் பிரயாண ஏஜெண்டு மிஸ்டர் M. S. ஆறுமுக நாடார் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள திருப்பவனம், சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, தேவகோட்டை, சிங்கம்புணரி, கீழக்கரை, இராமநாதபுரம் முதலிய முக்கிய வட்டகைகளுக்குவருகிறார். நமதுகுலாபிமானிகள் ஆதரித்து மித்திரன் அபிவிருத்தியை நாடப் பிரார்த்திக்கிறோம்.

மானேஜர்.

நமது மித்திரன்

போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை. நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோதவிகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. ஜோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூர். தண்டுப்பத்து, மிராஸ்தார் ஸ்ரீமான் சோ செல்லத்துரை நாடார்

ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் 26-நிர் நாரீஸ்ரோடு கொழும்பு.

ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார் திருப்பாப்பு நாடார்விளை திருநெல்வேலி ஜில்லா,

ஸ்ரீமான் வே. சுடலைமாடநாடார், சிறுகாடன் குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா.

ஸ்ரீமான் நா ஆறுமுகநயினார் நாடார், பெரியகண்டம்வடலி திருநெல்வேலி ஜில்லா.

ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார், சிறுகாடன்குடியிருபபு திருநெல்வேலி ஜில்லா.

ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார், சிறுகாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா.

ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார் உடையார்குளம் திருநெல்வேலி ஜில்லா.